# SHRIMATI INDIRA GANDHI COLLEGE

(Nationally Accredited at "A" Grade (3rd Cycle) by NAAC)


Chatram Bus Stand, Tiruchirappalli – 620002.

## DINAMALAR 02/10/1994



திருச்சி இந்திராகாந்தி கல்லூரியில் கணிப்பொறியியல் விழிப்புணர்ச்சிக் கழக கூட்டம் நடந்தது. இதில் கலந்து கொண்ட பெங்களூர் என்.ஏ.எல் நிறுவன உயர் அதிகாரி சீனிவாசனுக்கு நினைவுப் பரிசை கல்லூரியின் துணை முதல்வர் மீனா, மாணவி மலர்விழி ஆகியோர் வழங்கினர்.

## DINAMALAR 02/10/1994




திருச்சி இந்திராகாந்தி கல்லூரியில் கணிப்பொறியியல் விழிப்புணர்ச்சிக்கழக கூட்டம் நேற்று நடந்தது. இதில் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்ட ஆர். சீனிவாசன் (பெங்களூர் என்.ஏ.எல்), இந்திராகாந்தி கல்லூரி துணை முதல்வர் மீனாரமேஷ் ஆகியோரை படத்தில் காணலாம்.

### கம்ப்யூட்டர் விழிப்புணர்ச்சி கூட்டம்!

#### இந்திராகாந்தி கல்லூரியில் நடந்தது!!

திருச்சி, அக்.2-

திருச்சி இந்திராகாந்தி கல்லூரியில் கணிப்பொறியியல் விழிப்புணர்ச்சிக் கழக கூட்டம் நேற்று (சனிக்கிழமை) நடந்தது.

விழாவுக்கு இந்திராகாந்தி கல்லூரியின் துணை முதல்வரும், கணிப்பொறியியல்துறை தலைவியுமான மீனா ரமேஷ் தலைமை தாங்கினார்.

இதில் சிறப்பு விருந்தினராக சீனிவாசன் (பெங்களூர் என்.ஏ.எல்) கலந்து கொண்டார். அவருக்கு மீனா ரமேஷ், மலர் விழி ஆகியோர் நினைவு பரிசு வழங்கினர்.

பின்னர் சீனிவாசன் கணிப்பொறி அறிவியல் மற்றும் பொறியியல்துறையில் தரமான வேலைவாய்ப்புக்கள், கம்ப்யூட்டர் நெட்வொர்க்ஸ் பற்றி பேசினார்.

இந்நிகழ்ச்சியில் இந்திரா காந்தி கல்லூரி மற்றும் பிற கல்லூரி மாணவ- மாணவிகள் கலந்து கொண்டனர்.

முன்னதாக மாணவி இந்திரா வரவேற்றார். முடிவில் மாணவி ஹேமமாலினி நன்றி கூறினார்.

# SHRIMATI INDIRA GANDHI COLLEGE

(Nationally Accredited at "A" Grade (3rd Cycle) by NAAC)

Chatram Bus Stand, Tiruchirappalli – 620002.

## DINAMALAR 23/10/94



கம்ப்யூட்டர் பயிற்சியின் போது முதல்பரிசு பெற்ற மாணவி ஸ்ரீவித்யாவிற்கு கூடுதல் ரயில்வே மேலாளர் பி.ஆர்.எஸ்.நாராயணன் பரிசு வழங்குகிறார். அருகில் துணை முதல்வர் மீனா உள்ளார்.

## MALAIMURASU 27/10/94

இந்திராகாந்தி கல்லூரியில்

### கணிப்பொறி பயிற்சிவகுப்பு

திருச்சி, அக். 26-

இந்திராகாந்தி கல்லூரியில் ஸ்ரீ ஜெயந்திரா மெட்ரிக்குலேஷன் மேல்நிலைப்பள்ளி மாணவிகளுக்கு கணிப்பொறி புத்தொளி பயிற்சி வகுப்புகள் இரண்டு நாட்கள் நடைபெற்றன.

இப்பயிற்சி வகுப்பில் மாணவிகளுக்கு தேர்வுகள் வைக்கப்பட்டன. இத்தேர்வில் வெற்றி பெற்ற மாணவிகளுக்கு பரிசு மற்றும் சான்றிதழ் வழங்கும் விழா நடைபெற்றது.

விழாவில் சிறப்பு விருந்தினராக ரெயில்வே கூடுதல் மேலாளர் பி.ஆர்.எஸ். நாராயணன் பங்கு கொண்டார். ஆசிரியை ஷோபனா வரவேற்புரை நிகழ்த்தினார்.

கல்லூரியின் துணை முதல்வர் மீனா கணிப்பொறியியல் புத்தொளி இயக்கத்தின் சார்பாக அறிக்கை வாசித்தார்.

விழாவில் தேசிய கல்லூரி குழு செயலாளர் சந்தானம், தேசிய கல்லூரி குழுவின் உறுப்பினர்கள் காசிநாதன், சேதுராமன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

விழா முடிவில் இந்திராகாந்தி கல்லூரி மாணவி ஹேமமாலினி நன்றி கூறினார்.

# SHRIMATI INDIRA GANDHI COLLEGE

(Nationally Accredited at "A" Grade (3rd Cycle) by NAAC)

Chatram Bus Stand, Tiruchirappalli – 620002.

## DINAKARAN 28/10/94



இந்திரா காந்தி கல்லூரி துணை முதல்வர் மீனா, ரெயில்வே கூடுதல் மேலாளர் பி.ஆர்.எஸ். நாராயணனுக்கு 'கம்ப்யூட்டர் விழிப்புணர்ச்சி மையம்,' சார்பில் நினைவுப்பரிசு வழங்கியபோது எடுத்தபடம். அருகில் ஸ்ரீஜெயேந்திரர் மெட்ரிக்குலேஷன் பள்ளி தலைமை ஆசிரியை லெட்சுமி உள்ளார்.

### கணிப்பொறி புத்தொளி பயிற்சிவகுப்பு!

#### இந்திராகாந்தி கல்லூரியில் நடந்தது!!

திருச்சி, அக்.28-

திருச்சியில் உள்ள இந்திரா காந்தி கல்லூரியில் ஸ்ரீஜெயந்திரா மெட்ரிக்குலேஷன் மேல் நிலைப்பள்ளி மாணவிகளுக்கு, கணிப்பொறி புத்தொளி பயிற்சி வகுப்புகள் இரண்டு நாட்கள் நடைபெற்றன. இப்பயிற்சி வகுப்பில் தேர்வுகள் மாணவிகளுக்கு வைக்கப்பட்டன. இத்தேர்வில் வெற்றிபெற்ற மாணவிகளுக்கு பரிசு மற்றும் சான்றிதழ் வழங்கும் விழா நடைபெற்றது.

பரிசளிப்பு விழாவில் சிறப்பு விருந்தினராக ரெயில்வே துணை கூடுதல் மேலாளர் நாராயணன் கலந்து கொண்டார். ஆசிரியை ஷோபனா வரவேற்புரை நிகழ்த்தினார். கல்லூரியின் துணை முதல்வர் மீனா கணிப்பொறியின் புத்தொளி இயக்கத்தின் சார்பாக அறிக்கை வாசித்தார். இவ்வறிக்கையில் நம் அன்றாட வாழ்க்கையில் "கணிப்பொறி" ஒரு முக்கிய பங்கு வகிக்கிறது என்றும், கல்லூரியில் கணிப்பொறியியலில் இளங்கலை, முதுகலை பட்ட வகுப்புகள் அனைத்தும் இருப்பதாக கூறினார்.

போட்டியில் வெற்றிபெற்ற மாணவிகளுக்கு விழா தலைவர் பரிசு வழங்கினார். விழாவில் தேசிய கல்லூரி குழு செயலாளர் சந்தானம், தேசிய கல்லூரி குழுவின் உறுப்பினர் ரமேஷ், சேதுராமனும் விழாவில் கலந்து கொண்டனர். இந்திரா காந்தி கல்லூரி துணை முதல்வர் மீனா மற்றும் ஸ்ரீஜெயந்திரா மெட்ரிக்குலேஷன் பள்ளி முதல்வர் லட்சுமி ஆகியோரின் முன்னிலையில் நடந்தது.

இந்திராகாந்தி கல்லூரி மாணவி ஹேமமாலினி நன்றி கூறினார்.

## DINATHANTHI-THOZHIL MALAR 1/10/95





இந்திரா காந்தி கல்லூரி துணை முதல்வர் மீனா

திருச்சி

### இந்திரா காந்தி கல்லூரியில் கணிப்பொறி துறையின் வளர்ச்சி

இந்திரா காந்தி மகளிர் கல்லூரியின் கணிப்பொறித்துறை பத்தாண்டு வளர்ச்சி பெற்றதாகும். 1985-ல் 30 மாணவிகளுடன் தொடங்கப்பெற்ற இளங்கலை கணிப்பொறியியல்

களும் துவங்கப்பட்டுள்ளன.

பகல் நேரக் கல்லூரியில் பி. எஸ். சி., எம். எஸ்சி., வகுப்புகளும் மாலை நேரக் கல்லூரியில் பி. எஸ்சி., எம். சி. ஏ., பி. ஜி.

கும் மேற்பட்டது.

இத்துறையைச் சேர்ந்த ஆசிரியைகளின் எண்ணிக்கை 15. இது தவிர 4 புரோகிராம்கள். அனைத்து ஆசிரியைகளும் பல்கலைக்கழகத்தினால் நிர்ணயம் செய்யப்பட்ட கல்வித் தகுதி பெற்றவர்களாகும்.

இத்துறையின் தலைவரும் கல்லூரியின் துணை முதல்வருமான பேராசிரியை மீனா அவர்கள் எம். எஸ். சி. எம். பி. எல்., எம். சி. எம். ஐ. இ. ஆவார். தற்போது அண்ணா பல்கலைக் கழகத்தில் நியூரல் நெட் வொர்க்ஸ் பற்றி பி. எச்டி. பட்டத்திற்கு ஆய்வு செய்து வருகிறார்கள்.

இத்துணை மாணவிகளும் செய்முறை வகுப்பில் பங்கு பெற வேண்டித் தகுந்த முறையில் கணிப்பொறி ஆய்வுக்கூடம் அமைக்கப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகிறது. இவ்வாய்வுக்கூடம் டாக்டர் ஞானம், டாக்டர் முத்துக்குமரன், டாக்டர் முத்துக் கருப்பன் போன்ற பல்கலைக்கழக துணை வேந்தர்கள் உள்ளிட்ட பல அறிஞர்களின் பாராட்டைப் பெற்றுள்ளது. தொழிற் கல்லூரியில்லாத சுயநிதிக் கல்லூரிகளிலேயே இவ்வளவு நன்கமைக்கப்பட்டுள்ள கணிப்பொறி ஆய்வுக்கூடத்தைக் காணுதல் அரிது. குளு குளு வசதி செய்யப்பட்ட 1800 சதுர அடி ஹாலில் 65 டெர்மினல்கள் அமைக்கப்பட்டுள்ளன. மேக்னம் கம்ப்யூட்டரில் 37 டெர்மினல்களும், லான் கம்ப்யூட்டரில் 13 டெர்மினல்களும் இணைக்கப்பட்டுள்ளன. இது தவிர ஏ. டி./286ல் 2-ம், ஏ. டி. 386-ல் 3-ம், வெக்ட்ரா வித்மோர் என்ற சாதனமும் உள்ளன. 6 பிரிண்டர்களும் 25 சோதனை மேஜைகளும் உள்ளன.

கம்ப்யூட்டர் துறையை ஒட்டிய மைக்ரோ ப்ரொஸஸர் ஆய்வுக் கூடமும் நல்ல முறையில் அமைக்கப்பட்டுச் செயலாற்றி வருகின்றன. இவ்வாண்டு மேலும் சில

சென்னை போன்று ரொலை தூரத்திலிருந்து இக்கல்லூயைத் தேடி மாணவிகள் குவிவ இக்கல்லூரி கணிப்பொறித்துறையின் புகழுக்கு தக்க சான்றாகு.

இக்கல்லூரியில் பிலும் மாணவிகள் ஆண்டு தோறும் பல்கலைக்கழகத் தேர்வுகளில்பரும் வெற்றி அடைவதோடு, ஊிவர் சிட்டி, ரேங்குகளும் அடைந்து வருகின்றனர். 1995-ம் ்ண்டு ஏப்ரல், மே-யில் நடைபற்ற தேர்வுகளில் இக்கலூரி மாணவிகளின் தேர்ச்சி வரம் பின் வருமாறு:—

எம். எஸ்சி.; 97 சதம், எம். சி. ஏ. 87 சதம். பி. ஜி. டி. சி. ஏ. 60 சதம்.

1994-ம் ஆண்டு மாணிகள் பெற்ற ரேங்க் விபரம்:-

பி. எஸ்சி. முதல் ரங்க உள்ளிட்ட 6 ரேங்குகள்.

எம். எஸ். சி. 7 ரேஙகள் எம். சி. ஏ. 3 ரேங்குகள்.

பாரதிதாசன் பல்கலைகழக அஞ்சல் வழி வகுப்புரின் செயல்முறை வகுப்புகள் இதிரா காந்தி கல்லூரியின் ஆ்வுக் கூடத்தில் நடைபெற்று வுவது இக்கல்லூரி யின் மற்றாரு சிறப்பாகும்.

#### வாழ்வில் உயர...

வாழ்வில் உயர வேண்டுமா? இதோ சில யோசனை!

சுறுசுறுப்பாய் இரு-
படபடப்பாய் இருக்காதே
பொறுமையாய் இரு-
சோம்பேறியாய் இருக்காதே
சிக்கனமாய் இரு-
அடிமையாய் இருக்காதே

#### ஒரு மணி நேரத்தில்...

நாம் ஒரு மணி நேத்தில் 2500 வார்த்தைக பேசுகிறோம்.

• 500 தடவை கசிமிட்டுகிறோம்.


பூமி 66 ஆயிற மைல் பயணம் செய்கிறது

கப்பல்கள் 60 லட்ச

SHRIMATI INDIRA GANDHI COLLEGE
(Nationally Accredited at "A" Grade (3rd Cycle) by NAAC)
Chatram Bus Stand, Tiruchirappalli – 620002.

# MALAIMALAR 22/12/95

## கம்ப்யூட்டர் யுக கல்லூரி முதல்வர்



**1984**-ம் ஆண்டின் ஒரு இனிய, பொன் மாலைப் பொழுது...

திருச்சி பாரதிதாசன் பல்கலை கழகம் தனது முதல் பட்டமளிப்பு விழா உற்சாகத்தில் திளைத்திருக்க... எதிர்கால கனவுகளை இதயத்தில் தேக்கியபடி... இன்னும் சிறிது நேரத்தில் தலைகளில் கவுரவ கிரீடங்களை சூட்டிக் கொண்டு... கரங்களில் காகித சான்றிதழ் பூக்களை பெறப் போகும் அந்த இளைய தலை முறைகளின் அணிவகுப்பில் மீனாவும் ஒருவர்.

எம்.எஸ்.சி. பட்டப்படிப்பில் முதல் மதிப்பெண் பெற்று... பரபரப்பாக பேசப்பட்ட மீனாவுக்கு அந்த பல்கலை கழகம் தங்கப்பதக்கம் வழங்கி கவுரவித்தது. மீனா... அதே ஆண்டில் திருச்சி இந்திரா காந்தி கல்லூரியில் பேராசிரியை ஆனார்... அதற்கடுத்த ஆண்டு கெட்டி மேளம் முழங்க.. அரங்கேறியது.

கணவர் நீதி மன்றத்தில் வக்கீலாக வாதாடிக் கொண்டிருக்க... இவர் கல்லூரி அரங்குகளில் விளக்கம் அளித்து கொண்டிருக்க... இன்னும் சில ஆண்டுகளில் எம்.பீல். கம்யூட்டர் சயின்ஸ் எம்.இ. என்று பல பட்டங்களை தட்டிச் சென்றார் மீனா... சந்திரசேகரன் என்ற மகன் பிறந்த கையோடு அதே கல்லூரியின் முதல்வருமானார் மீனா...

கிட்டத்தட்ட 3 ஆயிரம் மாணவிகளைக் கொண்ட அந்த பெண்கள் கல்லூரியில் புதிய கம்ப்யூட்டர் புரட்சி பூக்கள் பூத்திருக்கின்றன.

மீனா சொல்கிறார்...

இது கம்ப்யூட்டர் யுகம். பெண்கள் கம்ப்யூட்டர்களை இயக்க தொடங்கினால்... முன்னேற்றத்தை வெகு விரைவில் தொட்டு விடலாம்... ஆகவேதான்.. இங்கு கம்யூட்டர் என்பது மாணவிகளுக்கு மட்டுமல்ல... விடுமுறை நாட்களில் குடும்பத் தலைவிகளுக்கும் கூட இன்னும் கம்ப்யூட்டர் பயிற்சியும்.. என்கிறார்.

சிங்கப்பூரில் நடந்த சர்வதேச கம்ப்யூட்டர் கருத்தரங்கில் தனது புதிய தொழில் நுட்பம் பற்றிய ஆய்வறிக்கையை சமர்ப்பித்திருக்கும் மீனா... மலேயாவில் உள்ள செயின்ட்ஸ் பல்கலைக் கழகம், பாரதியார் பல்கலை கழகம், அண்ணாமலை பல்கலைக் கழகம் என்று ஆயிரக் கணக்கான இதயங்களுக்கிடையே கம்ப்யூட்டரின் செயற்கை நரம்புவலை பற்றி புதிய பரிணாமத்தை விதைத்து பலத்த கரகோஷத்தை பல முறை அள்ளிச் சென்றவர்.

"அகப்பை தூக்கி அடுப்பங்கரைக்குள் மூழ்கிப் போன என் சகோதரிகள்... புதிய பூபாளம் பாட புறப்பட்டு வரவேண்டும். அவர்களின் பட்டு விரல் களால் மெல்லத் தொட்டு கணிப் பொறியை உசுப்பி... வாழ்க்கையின் மவுன தூக்கம் கலைய வேண்டும். அதுவே என் ஆசை... அது நிறைவேறும்" என்கிறார். மீனா...

**ஆனந்த சுதந்திரம் அடைந்து விட்டோம் என்று கும்மியடி"**

## INDIAN EXPRESS 28/2/96

# Computer awareness camp conducted

EXPRESS NEWS SERVICE

TIRUCHI, Feb. 27 – The NSS unit of the Srimati Indira Gandhi College (SIGC) conducted a computer awareness programme at Mudalaipatti, near here, on Tuesday for the students of the Mudalaipatti Primary School.

Presiding over the function, College Principal Meena Ramesh said that computer can no longer be termed as 'only for urbanites' and appealed to the children to familiarise with the modern gadget.

Though children may not acquire knowledge about computers in a short period, it is necessary for them to know about it in the fast-changing world, Ms Meena said and added that the equipment had now become a house-hold product.

Offering felicitations, Mr G.Balakrishnan, Vice-Principal of St Joseph's College, appreciated the NSS volunteers of SIGC for bringing the computers to remote villages. He also appealed to them to take these children to their college and demonstrate various other programmes being performed in this field. This would be a motivating factor for the children, he felt. He wanted them to conduct such programmes at regular intervals and make it a permanent affair.

Mr R.Ganapathy Subramanian, former NSS officer, said such programmes in remote villages would not only create an awareness among the students but also children in rural pockets could know about the uses of computers. Mr Ravinthiran of St Joseph's College urged students to adopt more villages and teach the nuances of computers to children.

Earlier, Ms T.Malarvizhi welcomed the gathering and Ms M.Chitra proposed a vote of thanks. The SIGC students conducted a lecture-cum-demonstration programme to the students and villagers on computers and its uses.

## DINAMANI 29/2/96

# கிராமத்து மாணவர் பெற்ற கணிப்பொறி அனுபவம்

திருச்சி, பிப். 28—

திருச்சியிலிருந்து சுமார் 24 கிமீ தொலைவில் உள்ள முதலைப்பட்டி கிராமத்தைச் சேர்ந்த தொடக்கப் பள்ளி மாணவர்களுக்கு ஒரு புதுமையான அனுபவம்- கணிப்பொறியில் தங்கள் பெயரை முதன்முதலாக தானே பதித்துப் பார்த்த அனுபவம்!

முதலைப்பட்டி கிராமத்தை தத்தெடுத்து நலப் பணிகளைச் செய்து வரும் ஸ்ரீமதி இந்திரா காந்தி கல்லூரியின் நாட்டு நலப்பணித் திட்ட மாணவிகள், இந்த கிராமத்து மாணவர்களுக்கும் கிராம மக்களுக்கும் கணிப்பொறியையும் அதன் பயன்பாட்டையும் செயல்முறையில் விளக்கிக் காட்டினர்.

முதலைப்பட்டி தொடக்கப் பள்ளியில் மொத்தம் சுமார் 150 மாணவ, மாணவியர் உள்ளனர். இவர்களில் அதிகம்பேர் பெண்கள்.

பள்ளி மாணவ மாணவிகள் அனைவரும் ஒவ்வொருவராக அழைக்கப்பட்டு கணிப்பொறியில் அவர்களது பெயரை- அச்சுப்பலகையைப் பார்த்து ஒவ்வொரு எழுத்தாக தட்டிவிட, திரையில் எழுத்துகள் வருவதைக் காணச் செய்தனர். அதன் பின்னர் மாணவர்களுக்கு விலங்குகள் பற்றிய நிகழ்ச்சியை கணிப்பொறியில் இயக்கிக்காட்டினர்.

ஸ்ரீமதி இந்திரா காந்தி கல்லூரி முதல்வர் கே.மீனா ரமேஷ், பள்ளி மாணவர்களிடம் பேசியபோது, எதிர்வரும் காலங்களில் கணிப்பொறி நகர்ப்புறங்களில் மட்டுமின்றி கிராமப் புறங்களிலும் வந்துவிடும். விவசாயத் தகவல்களுக்காக கணிப்பொறி பயன்படுத்தும் சூழல் ஏற்படும் என்றார்.

தூய வளனார் கல்லூரி துணை முதல்வர் பேராசிரியர் ஜி.பாலகிருஷ்ணன் பேசும்போது, கிராமத்து மாணவர்களை கல்லூரிகளுக்கு அழைத்துவந்து கணிப்பொறியின் பல்வேறு பயன்பாடுகளையும் அறியும்படி செய்ய வேண்டும் என்றார்.

முன்னாள் நாட்டு நலப்பணித் திட்ட அலுவலர் ஆர்.கணபதி சுப்பிரமணியம், பேராசிரியர் ஜி.ரவீந்திரன் ஆகியோர் பேசினர். கணிப்பொறியியல் மாணவி டி.மலர்விழி வரவேற்றார். சித்ரா நன்றி தெரிவித்தார். புதன்கிழமையன்று மரம் நடுவிழா நடைபெற்றது.

மாலையில் கிராமத்து மக்களுக்கும் கணிப்பொறி பற்றிய ஓர் அறிமுகத்தை செய்துவைத்ததாக ஸ்ரீமதி இந்திரா காந்தி கல்லூரியின் முதல்வர் மீனா ரமேஷ் குறிப்பிட்டார்.

# SHRIMATI INDIRA GANDHI COLLEGE

(Nationally Accredited at "A" Grade (3rd Cycle) by NAAC)


Chatram Bus Stand, Tiruchirappalli – 620002.

## THE HINDU 11/3/96

# OMPUTER

## G PHASE OF LIFE — PART I

# mation technology



Learning the skill

Grants Commission has also established another network, INFLIBNET, through which leading li-braries of universities are inter-linked.

Dr. Muthukkaruppan said the varsity's stu-dent community can benefit from the V-SAT facility in numerous ways.

In the next phase, the university will launch a programme to connect the facility to interested colleges in the university area. The Bharathida-san University V-Sat could be launched in about a few months time, he said.

The Regional Engineering College, with one of the finest computer networking systems in the country, has recently installed a V-SAT sys-tem, and the same has been working on an experimental basis for the past two months.

Dr. Balamurugan, Head of Octagon, REC's computer centre, said that the system was more economical and easier to install than terrestrial leased lines. It was more suitable for developing countries like India, where good quality terres-trial links to remote areas were not available. V-SAT was far more reliable with an uptime of more than 99 per cent. The REC V-SAT is con-nected, to ERNET (Education and Research net-work), administered by the Department of Electronics.

### Links with industry

The Science and Technology Entrepreneur Park of the Regional Engineering College, Ti-ruchi (TREC STEP), has identified certain key areas, such as computer education, quality trainsing in ISO-9000 and TQM areas under its programme of transferring business skills to in-dustries.

In the field of computer education, it offers industry oriented computer education at the lowest feasible cost structure, said Mr. RMP. Ja-wahar, Manager, TREC STEP.

The curriculum has been structured in con-sultation with industry, academicians, and rele-vant experts in specific areas of application. Courses such as Wordstar, Lotus, D Base, and Clipper are spread over a week to a month, with a fee Rs. 325 to Rs. 900 per course.

Mr. Jawahar said TREC STEP had trained 1,572 students to date since 1991. Moreover, about 65 per cent of the students had been em-ployed. About 30 per cent of trainees were work-ing professionals keen to improve growth prospects, while 50 per cent were graduates and college students. The remaining were fresh from school. About 25 per cent were women.

V. Ganapathi


# SHRIMATI INDIRA GANDHI COLLEGE

(Nationally Accredited at "A" Grade (3rd Cycle) by NAAC)

Chatram Bus Stand, Tiruchirappalli – 620002.

## INDIAN EXPRESS 15/3/96

### NSS students set the pace for bringing PCs to rural kids



'When I pressed the key board, I was thrilled'. I was under the impression that it was a television, but later I was told that it is a computer, said a bemused Manivel, a tiny-tot of Mudalaipatti, an obscure village 30 kilometres from Tiruchi.

The kids of Mudalaipatti Primary School, stepped into a new world of computers, thanks to the efforts of the NSS volunteers and Principal of Shrimati Indira Gandhi College. The kids were taken by surprise when they were exposed to the hitech brought to their village.

With much enthusiasm, Mekhala, a fifth standard student said 'I saw my name appear on the screen, I also tried my hand in doing some addition and multiplication. This is something I have never imagined I could see or do.''

Equally inspired, a fourth standard lad said 'I have never seen this gadget before, but when I was allowed to operate the computer I was delighted. For quite sometime he looked perplexed as if he was looking at a rare magic machine.

Comparatively eight-year-old Srinivas of the same school said 'My mother used to tell tales about stars, moon and planets while feeding my dinner' but when I saw all these in the computer I was simply wondering and asked my teacher how was it possible to see them through the small screen when they were up in the sky. My teacher told me some thing which I could not understand, May be when I grow I will learn it, he quipped.

This is how kids reacted when they had the first feel of the PC. Of course, their reactions were spontaneous and natural. A pin-drop silence among the kids itself endorsed their eagerness and curiosity towards learning things which were innovative.

When in these days even urban kids were not much exposed to this world of robots, it was an unique programme organised in this silent hamlet. All this was made possible by the young team of NSS girls of SIGC who took this novel venture in the form of NSS. The result came out better than expected, they said.

It was really an awakening camp for the rural kids, especially for the girls who were watching it with more fun and shocked to see their pet animals and the famous dinosaur on the screen.

When the NSS students explained the nuances of computer, the kids had a volley of questions ranging from simple graphics to complex mathematical problems.

Even some of the parents and the school headmaster unanimously appealed to the girls: Teach our children about computers. Do visit our village regularly as we cannot afford to send the kids to urban areas for learning computers.

The school teacher says with confidence that one of her student, Sathya (12) may even turn up as another Shakuntala Devi as her questions were simply thought provoking and connected with mathematics and puzzles.

Later, the NSS students expressed happiness on having taken the PC from lab to land. College Principal Ms Meena said 'In tune with the information era, the circle will be complete only when everybody knew about the advantages of computer as it had become another commodity in everybody's daily life'.

Some of the kids asked the NSS students: When will you come back, pat came the reply: once in a fortnight.

Hats off to the NSS volunteers, its Principal and co-ordinators for setting new trends.



L. Sri Krishna

## DINAMALAR 29/4/96

### திருச்சியில் கம்ப்யூட்டர் மையம்

திருச்சி, ஏப்.29—

டாடா யுனிசிஸ் நிறுவனம் சார்பில் திருச்சியில் கம்ப்யூட்டர் பயிற்சி மையம் துவக்கப்பட்டுள்ளது.

டாடா யுனிசிஸ் கல்வி நிறுவனம் சார்பில் கம்ப்யூட்டர் பயிற்சி மையங்கள் நடத்தப்பட்டு வருகின்றன. தென்னிந்தியாவில் 22 மையங்கள் செயல்பட்டு வருகின்றன. தமிழகத்தில் சென்னை, சேலம், கோவை தற்போது திருச்சியில் ஆகிய இடங்களில் கம்ப்யூட்டர் பயிற்சி மையங்கள் இயங்குகின்றன. விரைவில் மதுரையில் துவக்கப்பட உள்ளது.

இப்பயிற்சி மையத்தில் மாணவர்களுக்கான ஒரு வருடம் ஒன்றரை வருடம் 2 வருட பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. இது தவிர அனைவரும் கம்ப்யூட்டர் பயிற்சி பெறுவதற்கான 3 மாத படிப்பும் கற்றுத்தரப்படுகிறது.

டாடா யுனிசிஸ் கம்ப்யூட்டர் பயிற்சி மையம் திருச்சி மதுரை ரோட்டிலுள்ள ஸ்ரீ காம்ப்ளக்சில் நேற்று துவக்கப்பட்டுள்ளது. திருச்சி மண்டல பொறியியல் கல்லூரி முதல்வர் மிஸ்ரா தலைமை தாங்கினார். இந்திரா காந்தி கல்லூரி முதல்வர் மீனா, ராமலிங்க நகர் ஸ்டேட் பாங்க் கிளை மேலாளர் விஜயகுமார், திருமகள் கம்ப்யூட்டர் நிறுவன நிர்வாக இயக்குனர் ரவிச்சந்திரன், இயக்குனர் தியாகராஜன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

இப்பயிற்சி மையம் காலை 7 மணி முதல் இரவு 9 மணி வரை செயல்படும்.

## DINAKARAN 20/10/96

திருச்சியில்


# கம்ப்யூட்டர் பயன்பாட்டு போட்டி!

### 22-ந் தேதி நடக்கிறது!!

திருச்சி, அக். 20- கம்ப்யூட்டர் சொசைட்டி ஆப் இந்தியாவின் பத்தாமாண்டு நிறைவு விழாவையொட்டி திருச்சி இந்திராகாந்தி கல்லூரியின் சி.எஸ்.ஐ. மாணவியர் பிரிவு மேல்நிலைப்பள்ளிகளுக்கிடையேயான கணிப்பொறி பயன்பாட்டுப் போட்டிகளை வருகிற 22 மற்றும் 23-ந்தேதிகளில் நடத்துகிறது. இந்த போட்டிகளில் ஸாப்ட்வேர் போட்டி ரேபிட்டாக் சொல் விளையாட்டு மார்க்கெட்டிங் ஸ்னாப்ஷாப் முதலியவை இடம் பெறும். ஏறத்தாழ இருபது மேல்நிலைப்பள்ளிகளை சேர்ந்த 107 மாணவ-மாணவிகள் கலந்து கொள்கிறார்கள். போட்டிகளை தென்னக ரெயில்வேயின் மத்திய தொழிலகத்தின் தலைமை நிர்வாகி வி.கார்மெலஸ் தொடங்கி வைக்கிறார். மண்டலப்பொறியியல் கல்லூரியின் முதல்வரும் சி.எஸ்.ஐ. அத்தியாயத்தின் தலைவருமான டாக்டர் கே.எல்.பி.மிஷ்ரா தலைமையில் 22-ந்தேதி காலை 9.30மணிக்கு விழா தொடங்குகிறது. 22-ந்தேதி நடைபெற இருக்கின்ற பரிசளிப்பு விழாவில் புனித இருதய மேல்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியரும், செயலாளருமான மறைதிரு. மனோகர்தாஸ் நிறைவுரை ஆற்றுகிறார். சீதா லெட்சுமி ராமசாமி கல்லூரியின் ஓய்வு பெற்ற இயற்பியல் பேராசிரியை டாக்டர் அ.தனலெட்சுமி போட்டிகளில் பங்கு பெற்ற மாணவ மாணவியர்க்கு சான்றிதழ்களை வழங்குவார். இதற்கான ஏற்பாடுகளை இந்திரா காந்தி கல்லூரி முதல்வரும், கணிப்பொறி துறையின் தலைவரும், சி.எஸ்.ஐ. அத்தியாயத்தின் துணைத்

**SHRIMATI INDIRA GANDHI COLLEGE**
(Nationally Accredited at "A" Grade (3rd Cycle) by NAAC)
Chatram Bus Stand, Tiruchirappalli – 620002.

# DINAKARAN 23/10/96




கம்ப்யூட்டர் சொசைட்டி ஆப் இந்தியாவின் மகளிர் மாணவியர் பிரிவு சார்பாக மேல்நிலை பள்ளிகளுக்கிடையேயான கணிப்பொறி இயல் மாணவர்களுக்கான 2 நாள் போட்டிகள் தொடக்க விழாவில் இந்திரா காந்தி கல்லூரி முதல்வர் கே. மீனா பேசும்போது எடுத்த படம். அருகில் சிறப்பு விருந்தினர் வி.கார்மெலஸ், சி.எஸ்.ஐ. தலைவர் மிஸ்ரா ஆகியோர் உள்ளனர்.

கணிப்பொறி இயல்

# மாணவருக்கான போட்டி!

திருச்சி, அக். 23-

கம்ப்யூட்டர் சொசைட்டி ஆப் இந்தியாவின் மகளிர் மாணவியர்பிரிவு சார்பாக மேல்நிலைப் பள்ளிகளுக்கிடையேயான கணிப்பொறி இயல் மாணவர்களுக்கான இரு நாள் போட்டிகள் திருச்சி இந்திரா காந்தி கல்லூரியில் தொடங்கி வைக்கப்பட்டன. இந்நிகழ்ச்சியை திருச்சி மண்டலப் பொறியியல் கல்லூரியின் முதல்வரும், திருச்சி சி.எஸ்.ஐ. பிரிவின் தலைவருமான டாக்டர் கே.எல்.பி. மிஷ்ராவின் தலைமையில் தென்னக ரெயில்வேயின் மத்திய தொழிலகத் தலைவர் வி.கார்மெலஸ் துவக்கி வைத்தார்.

இந்திரா காந்தி கல்லூரி முதல்வரும், கணிப்பொறி துறையின் தலைவரும், சி.எஸ்.ஐ. பிரிவின் துணைத் தலைவருமான டாக்டர் கே. மீனா வரவேற்புரையாற்றினார். திருச்சியைச்சார்ந்த ஏறத்தாழ 20 பள்ளிகளிலிருந்து நூற்றுக்கும் மேற்பட்ட மாணவ, மாணவியர்கள் பல்வேறு போட்டிகளில் பங்கேற்கிறார்கள். மேல்நிலைப்பள்ளி மாணவர்களின் கணிப்பொறி விழிப்புணர்வைத் தூண்டவும், தகுதி உள்ளவர்களை ஊக்குவிப்பதற்காகவும், "ஸாஃப்ட்வேர்" "காண்டெஸ்ட்" "சினாப்ஷாட்". "ரேபிட்டாக்" "கம்ப்யீவோட்" போன்ற போட்டிகள் முதல் நாள் நடத்தப்பட்டன.சி.எஸ்.ஐ. திருச்சிராப்பள்ளி தொடங்கி பத்தாவது ஆண்டாக இவ்வாண்டு இருப்பதால், இந்நிகழ்ச்சி குறிப்பிடத்தக்கதாக உள்ளது.

## MALAIMALAR 23/10/96

இந்திராகாந்தி கல்லூரியில்

### கணிப்பொறி மாணவர்களுக்கான போட்டிகள்!

திருச்சி, அக். 23-

கம்ப்யூட்டர் சொசைட்டி ஆஃப் இந்தியாவின் மகளிர் மாணவியர் பிரிவு சார்பாக மேல்நிலைப் பள்ளிகளுக்கு இடையேயான கணிப்பொறி இயல் மாணவர்களுக்கான இருநாள் போட்டிகள் நேற்று (22-ந் தேதி) தொடங்கி வைக்கப்பட்டன.

இந்நிகழ்ச்சியை திருச்சி மண்டலப் பொறியியல் கல்லூரியின் முதல்வரும், திருச்சி சி.எஸ்.ஐ. பிரிவின் தலைவருமான டாக்டர் கே.எல்.பி. மிஷ்ராவின் தலைமையில் தென்னக ரெயில்வேயின் மத்திய தொழிலகத் தலைவர் வி. கார்மெலஸ் தொடங்கி வைத்தார்.

இந்திராகாந்தி கல்லூரி முதல்வரும், கணிப்பொறி துறையின் தலைவரும், சி.எஸ்.ஐ. பிரிவின் துணைத் தலைவருமான டாக்டர் கே.மீனா வரவேற்புரையாற்றினார்.

திருச்சியைச் சார்ந்த ஏறத்தாழ 20 பள்ளிகளிலிருந்து நூற்றுக்கும் மேற்பட்ட மாணவ, மாணவியர்கள் பல்வேறு போட்டிகளில் பங்கேற்கிறார்கள். மேல்நிலைப்பள்ளி மாணவர்களின் கணிப்பொறி விழிப்புணர்வைத் தூண்டவும், தகுதி உள்ளவர்களை ஊக்குவிப்பதற்காகவும், ஸாஃப்ட்வேர் காண்டெஸ்ட், சினாப்ஷாட், ரேபிட்டாக், கம்ப்யூவேட் போன்ற போட்டிகள் முதல் நாள் நடத்தப்பட்டன.

**SHRIMATI INDIRA GANDHI COLLEGE**

(Nationally Accredited at "A" Grade (3rd Cycle) by NAAC)

Chatram Bus Stand, Tiruchirappalli – 620002.

# DINATHANTHI 24/10/96



**கணிப்பொறி இயல்**

## மாணவர்களுக்கு போட்டி

திருச்சி, அக். 24–

இந்திய கம்ப்யூட்டர் சங்கம் மகளிர் பிரிவு சார்பில் இந்திரா காந்தி கல்லூரியில் மேல் நிலைப்பள்ளி கணிப்பொறி இயல் மாணவர்களுக்கு இடையிலான இருநாள் போட்டிகள் தொடங்கியது. திருச்சி மண்டல என்ஜினீயரிங் கல்லூரி முதல்வர் கே.எல்.பி. மிஸ்ரா போட்டிகளுக்கு தலைமை தாங்கினார். இந்திரா காந்தி கல்லூரி முதல்வரும், திருச்சி சி.எஸ்.ஐ. பிரிவு துணை தலைவருமான டாக்டர் கே. மீனா வரவேற்று பேசினார். தென்னக ரெயில்வேயின் மத்திய தொழிலகத் தலைவர் கார்மெலஷ் போட்டிகளை தொடங்கி வைத்தார். 20 பள்ளிகளில் இருந்து நூற்றுக்கும் மேற்பட்ட மாணவ மாணவிகள் கலந்து கொண்டனர்.

கணிப்பொறி விழிப்புணர்வைத் தூண்டும் வகையில் 'சாப்ட்வேர் காண்டெஸ்ட்' சினாப் ஷாட், ரேபிட்டாக் 'கம்ப்யூவேட்' ஆகிய போட்டிகள் நடத்தப்பட்டன.

# SHRIMATI INDIRA GANDHI COLLEGE

(Nationally Accredited at "A" Grade (3rd Cycle) by NAAC)

Chatram Bus Stand, Tiruchirappalli – 620002.


## MALAIMALAR 26/10/96

திருச்சியில்

# பள்ளி மாணவர்களுக்கு இடையே கம்ப்யூட்டர் போட்டி

திருச்சி, அக். 26—

திருச்சியில், பள்ளி மாணவர்களுக்கு இடையேயான கம்ப்யூட்டர் போட்டி நடைபெற்றது.

### 10–ம் ஆண்டு விழா

"கம்ப்யூட்டர் சொசைட்டி ஆப் இந்தியா" திருச்சி பிரிவின் 10—வது ஆண்டு நிறைவு விழாவை யொட்டி, திருச்சி இந்திரா காந்தி கல்லூரி, திருச்சி கம்ப்யூட்டர் சொசைட்டி ஆப் இந்தியாவின் பெண்கள் பிரிவின் சார்பில் கம்ப்யூட்டர் போட்டி நடத்தப்பட்டது. தென்னக ரெயில்வே பொன்மலை ஓர்க்ஷாப் மானேஜர் வி. கார்மேலஸ் போட்டியை தொடங்கி வைத்தார்.

திருச்சி மண்டல பொறியியல் கல்லூரி முதல்வரும் திருச்சி கம்ப்யூட்டர் சொசைட்டி ஆப் இந்தியா தலைவருமான டாக்டர் கே.எல்.பி. மிஸ்ரா தலைமை தாங்கி பேசினார். இந்திரா காந்தி கல்லூரி முதல்வரும் திருச்சி கம்ப்யூட்டர் சொசைட்டி ஆப் இந்தியா துணை தலைவருமான டாக்டர் கே. மீனா அனைவரையும் வரவேற்றார்.

திருச்சி ஜோசப் கல்லூரி பேராசிரியர் ஜி. பாலகிருஷ்ணன், தேசிய கல்லூரி பேராசிரியர் பி.எஸ். சந்திர மவுலி, மண்டல பொறியியல் கல்லூரி பேராசிரியை லீலா, சீதாலட்சுமி ராமசாமி கல்லூரி பேராசிரியை ஜமுனா, ஜமால் முகமது கல்லூரி பேராசிரியர் ஜார்ஜ் ஆகியோர் நடுவர்களாக இருந்தனர்.

திருச்சி மற்றும் சுற்றுப் புறங்களில் உள்ள 20—க்கும் மேற்பட்ட பள்ளிகளில் இருந்து சுமார் 100க்கும் மேற்பட்ட மாணவர்கள் இந்த போட்டிகளில் கலந்து கொண்டனர்.

### வெற்றி பெற்றவர்கள்

சாப்ட்வேர் போட்டியில் முதல் பரிசையும், இரண்டாம் பரிசையும் திருச்சி ஆர்.எஸ்.கே. மேல்நிலைப்பள்ளி பெற்றது. மூன்றாம் பரிசினை செயின்ட் ஆன்ஸ் பெண்கள் மேல்நிலைப் பள்ளி பெற்றது. ரேபிட்டாக் போட்டியில் முதல் பரிசினை செயின்ட் ஜோசப் பெண்கள் மேல்நிலைப்பள்ளியும், இரண்டாம் பரிசினை கேம்பியன் மேல் நிலைப்பள்ளியும் மூன்றாம் பரிசினை ஜெயேந்திரா மெட்ரிக்குலேஷன் மேல்நிலைப் பள்ளியும் பெற்றது.

ஸ்நாட் ஷாட் போட்டியில் வேளாங்கன்னி ராஜ் மெட்ரிக்குலேசன் பள்ளி முதல் பரிசையும், ஜெயேந்திரா மெட்ரிக்குலேசன் பள்ளி இரண்டாம் பரிசையும், இ.ஆர். மேல்நிலைப் பள்ளி மூன்றாம் பரிசையும் பெற்றது. வேர்ட் ஹேக்கர் போட்டியில் கேம்பியன் மேல் நிலைப்பள்ளிமுதல் பரிசையும், ஆர்.எஸ்.கே. மேல்நிலைப்பள்ளி இரண்டாம் பரிசையும் எஸ்.டி.ஏ. மேல்நிலைப்பள்ளி மூன்றாம் பரிசையும் பெற்றது.

ஸ்கிரீன் ஸ்நூக்கர் போட்டியில் செயின்ட் ஜோசப் பெண்கள் மேல்நிலைப்பள்ளி முதல் பரிசையும், கேம்பியன் மேல் நிலைப்பள்ளி இரண்டாம் பரிசையும், ஆர்.எஸ்.கே. மேல் நிலைப்பள்ளி மூன்றாம் பரிசையும் பெற்றது.

போட்டியின் நிறைவு நாள் நிகழ்ச்சியில் பொன்மலைப் பட்டி திரு இருதய உயர்நிலைப் பள்ளி தலைமை ஆசிரியர் மனோகர்தாஸ் கலந்து கொண்டு பேசினார். சீதா லட்சுமி ராமசாமி கல்லூரி முன்னாள் பேராசிரியை ஏ. தன லட்சுமி போட்டியில் பங்கு பெற்றவர்களுக்கு சான்றிதழ் வழங்கினார்.

போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு கம்ப்யூட்டர் சொசைட்டி ஆப் இந்தியா 10—ம் ஆண்டு நிறைவு விழாவில் வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது.

முடிவில் ரமா நன்றி கூறினார்.

## MALAIMURASU 26/10/96

# கம்ப்யூட்டர் திறன் போட்டி!

திருச்சி, அக். 26-

கம்ப்யூட்டர் சொசைட்டி ஆஃப் இண்டியாவின் திருச்சி பிரிவின் பத்தாமாண்டு நிறைவு விழாவை யொட்டி இந்திரா காந்தி கல்லூரி, திருச்சி கம்ப்யூட்டர் சொசைட்டி ஆஃப் இண்டியாவின் பெண்கள் பிரிவின் சார்பாக மேல்நிலைப் பள்ளிகளுக்கு இடையோன இருநாள் போட்டிகள் இந்திரா காந்தி கல்லூரியில் அக்டோபர் 22, 23 ஆகிய தேதிகளில் நடைபெற்றன. தென்னக ரெயில்வேயின் தலைமை ஒர்க்‌ஷாப் மேனேஜர் கார்மெலஸ் போட்டியை தொடங்கி வைத்தார்.

மண்டலப் பொறியியல் கல்லூரியின் முதல்வர் டாக்டர் கே.எல்.பி. மிஸ்ரா தலைமையுரை ஆற்றினார்.

இந்திராகாந்தி கல்லூரியின் முதல்வர் டாக்டர் கே.மீனா வரவேற்று பேசினார்.

ஜி.பாலகிருஷ்ணன் (ஆங்கிலப் பேராசிரியர், செயிண்ட் ஜோசப் கல்லூரி), சந்திரமவுலி (பேராசிரியர் தேசியக் கல்லூரி), லீலா (கம்ப்யூட்டர் சயின்ஸ் அண்ட் என்ஜினீயரிங் துறைத் தலைவர், மண்டலப் பொறியியல் கல்லூரி), ஜமுனா (சீதாலட்சுமி ராமசாமி கல்லூரி) மற்றும் ஜார்ஜ், (கணிப்பொறியல் துறை, ஜமால் முகம்மது கல்லூரி) ஆகியோர் நடுவர்களாக பொறுப் பேற்று போட்டிகளை நடத்தினர்.

23-ந் தேதி மாலை நடைபெற்ற நிறைவு விழா நிகழ்ச்சியில் பொன்மலைப்பட்டி சேக்ரட் ஹார்ட் உயர்நிலைப்பள்ளியின் தலைமையாசிரியர் அருட்தந்தை மனோகர்தாஸ் பங்கு கொண்டு நிறைவுரை ஆற்றினார்.

பங்கு பெற்றவர்களுக்கு டாக்டர் ஏ. தனலட்சுமி (முன்னாள் பேராசிரியர், சீதாலட்சுமி ராமசாமி கல்லூரி) சான்றிதழ்களை வழங்கினார். விழா முடிவில் இந்திராகாந்தி கல்லூரியின் ஆங்கிலத்துறை தலைவர் ரமா நன்றி கூறினார்.

SHRIMATI INDIRA GANDHI COLLEGE
(Nationally Accredited at “A” Grade (3rd Cycle) by NAAC)
Chatram Bus Stand, Tiruchirappalli – 620002.

# DINAMALAR 29/10/96

**SHRIMATI INDIRA GANDHI COLLEGE**

(Nationally Accredited at "A" Grade (3rd Cycle) by NAAC)

Chatram Bus Stand, Tiruchirappalli – 620002.

# பள்ளி மாணவர்களுக்கு கம்ப்யூட்டர் போட்டி

திருச்சி, அக்.29—

கம்ப்யூட்டர் சொசைட்டி ஆப் இந்தியாவின் திருச்சி பிரிவின் 10ம் ஆண்டு நிறைவையொட்டி இந்திரா காந்தி கல்லூரி மற்றும் திருச்சி கம்ப்யூட்டர் சொசைட்டி ஆப் இந்தியாவின் பெண்கள் பிரிவின் சார்பில் மேல்நிலைப்பள்ளி மாணவ, மாணவிகளுக்கிடையே கணிப் பொறி பற்றிய போட்டி நடைபெற்றது.

போட்டியில் 20க்கும் மேற்பட்ட பள்ளிகளிலிருந்து 100க்கும் அதிகமான மாணவர்கள் கலந்து கொண்டனர். போட்டிகளை திருச்சி ஆர்.இ.சி. கல்லூரி முதல்வர் கே.எல்.பி. மிஸ்ரா தலைமையில் பொன்மலை ரயில்வே பணிமனை மேலாளர் கார்மலஸ் துவக்கி வைத்தார். சாப்ட்வேர் போட்டியில் ஆர். எஸ்.கே பள்ளி முதல் மற்றும் இரண்டாம் பரிசுகளையும், செயின்ட் ஆன்ஸ் பள்ளி மூன்றாம் பரிசையும் வென்றது.

ரேபிட்டாக் போட்டியில் செயின் ஜோசப் பெண்கள் பள்ளி முதல் பரிசையும், கேம்பியன் பள்ளி இரண்டாம் பரிசையும், ஜெயேந்திரா மெட்ரிகுலேசன் பள்ளி மூன்றாம் பரிசையும் பெற்றனர்.

ஸ்நாப் ஷாட் போட்டியில் வேளாங்கன்னி மெட்ரிகுலேஷன் பள்ளி முதல் பரிசையும், ஜெயேந்திரா மெட்ரிகுலேசசன் பள்ளி இரண்டாம் பரிசையும், இ.ஆர். பள்ளி மூன்றாம் பரிசையும் பெற்றது.

வேர்ட் ஹேக்கர் போட்டியில் கேம்பியன் பள்ளி முதல் பரிசையும், ஆர்.எஸ்.கே. பள்ளி இரண்டாம் பரிசையும் எஸ்.டி.ஏ. பள்ளி 3ம் பரிசையும் பெற்றது.

ஸ்க்ரீன் ஸ்நாக்கர் போட்டியில் செயின்ட் ஜோசப் பெண்கள் பள்ளி முதல் பரிசையும், கேம்பியன் பள்ளி இரண்டாம் பரிசையும், ஆர். எஸ்.கே. பள்ளி மூன்றாம் பரிசையும் பெற்றது.

பின்னர் நடைபெற்ற நிறைவு விழாவில் கல்லூரி முதல்வர் மீனா வரவேற்று பேசினார். பொன்மலை சேக்ரட் ஹார்ட் பள்ளி தலைமையாசிரியர் மனோகர்தாஸ் சிறப்புரையாற்றினார். பேராசிரியர் தனலட்சுமி வெற்றி பெற்ற மாணவ, மாணவிகளுக்கு சான்றிதழ் வழங்கினார்.

முடிவில் ரமா நன்றி கூறினார்.

INDIAN EXPRESS 30.10.96

## Computer fete

TIRUCHI, Oct 30 – The R.S.K.Higher Secondary School has bagged the overall I prize in the two-day computer festival organised by the Computer Society of India of the Indira Gandhi College. Computer-related competitions, quiz, marketing and software contest were held. The Champion Higher Secondary School bagged the II prize while the St.Joseph's Anglo Indian Girls' Higher Secondary School bagged the III prize.

## DINAMANI 23/11/96

## இல்லத்தரசிகளுக்கு கணிப்பொறிப் பயிற்சி

திருச்சி, நவ.22-

இந்திரா காந்தி கல்லூரியும் கம்ப்யூட்டர் சொசைட்டி ஆப் இந்தியா அமைப்பின் மாணவியர் பிரிவும் இணைந்து இல்லத்தரசிகளுக்கான குறுகியகால கணிப்பொறி பயிற்சி வகுப்புகளை 25 தேதி முதல் ஒரு வாரம் நடத்தவுள்ளனர்.

இல்லத்தரசிகளிடையே கணிப்பொறி விழிப்புணர்வை ஏற்படுத்துவதே இப்பயிற்சியின் முக்கியக் குறிக்கோள். இது மட்டுமின்றி சமையல் குறிப்புகள், வீட்டு நிதி நிர்வாகம், ஆடை வடிவமைப்பு ஆகியவற்றை கணிப்பொறியில் உருவாக்கும் முறைகளும் விளக்கப்படவுள்ளதாக கல்லூரி முதல்வர் கே.மீனா தெரிவித்தார்.

இப்பயிற்சியை வருமான வரித் துறை ஆணையர் அருண் பரத் தொடங்கி வைக்கிறார்.

## DINATHANTHI 23/11/96

திருச்சியில்

# குடும்ப பெண்களுக்கு கம்ப்யூட்டர் பயிற்சி

## நாளை மறுநாள் தொடங்குகிறது

திருச்சி, நவ.23–
திருச்சியில் திருமணம் ஆன குடும்ப பெண்களுக்கு ஒரு வார கால கம்ப்யூட்டர் பயிற்சி இந்திரா காந்தி மகளிர் கல்லூரியில் நாளை மறுநாள் (25-ந்தேதி) தொடங்குகிறது. அடுத்த மாதம் 3-ந் தேதி வரை ஒரு வார காலம் பயிற்சி அளிக்கப்படுகிறது.

சமையல் குறிப்புகள், வீட்டு நிதி நிர்வாகம், வீட்டமைப்பு, வாழ்த்துமடல் அட்டைகள் தயாரிப்பு ஆகியவையும் மல்டி வீடியோ மூலம் விளக்கப்படுகிறது. இந்திரா காந்தி கல்லூரி முதல்வரும், கம்ப்யூட்டர் துறை தலைவருமான டாக்டர் கே.மீனா மற்றும் ஆசிரியைகள் பயிற்சி வகுப்புகளை நடத்துகிறார்கள். காலை 9 மணி முதல் பகல் 1 மணி வரை ஒரு பிரிவும் 1-30 முதல் 5 மணி வரையும் மற்றொரு பிரிவும் வகுப்புகள் நடைபெறும் பங்கு பெற்றவர்களுக்கு சான்றிதழும், சிறப்பு பரிசுகளும் வழங்கப்படும்.

25-ந் தேதி காலை 9 மணிக்கு திருச்சி வருமான வரி துறை துணை தலைவர் சி.அருண்பரத் பயிற்சிமுகாமை தொடங்கி வைக்கிறார். அகிலா அருண் குத்து விளக்கு ஏற்றுகிறார். நிறைவு விழாவில் மேயர் புனிதவல்லி கலந்து கொள்கிறார்.

## THE HINDU 26/11/96

# Computer application course for housewives

TIRUCHI, Nov. 25.

The Computer Society of India, Women's branch, in the Smt. Indira Gandhi college, on Monday launched a short term course on computer application to over 60 housewives in the city.

Mr. Arun Bharath, Assistant Commissioner of Income Tax, who inaugurated the one-week course, said that in these days of information technology, the new generation of students should know the basic features of computer technology, since computer knowledge would help them to pursue higher studies in any branches of learning.

Dr. K. Meena, principal of the college, said that the Smt. indira Gandhi college, women students computer association branch had 750 women students, the highest for any educational institution in the country. The one-week course would teach the housewives cookery, and special kitchen assistance through computers, shopping programmes and planning of family budget, home interior decoration, greeting card design, computer games, software packages demonstration of multi-media, and computer languages like D Lotus, word star, etc.

Mrs. Champaka Ramakrishnan convenor of the ladies organisations of Tiruchi city, said that it was most gratifying that the college has launched a programme to give exposure to housewives on computer, and computer application. Mrs. Arun Bharath, lit the kuthuvilakku. Ms. D. Jayanthi, member managing committee, CSI proposed a vote of thanks.

# SHRIMATI INDIRA GANDHI COLLEGE

(Nationally Accredited at "A" Grade (3rd Cycle) by NAAC)

Chatram Bus Stand, Tiruchirappalli – 620002.

## THE HINDU 16/12/96



A ten-day course to make housewives 'computer literate' organised by the women's branch of the Computer Society of India, at the Indira Gandhi College for Women, Tiruchi.

The banner at the entrance of the computer department in the Indira Gandhi College for Women reads: "Working woman's envy, housewife's pride." Indeed, the 76 housewives in the 25 to 60 age group with varying educational qualifications from SSLC to P.G. degrees who emerged successful in the 10-day computer awareness programme, said they realised, that the computer was a useful addition to the other gadgets such as the Washing machine, mixer, grinder and television in their homes. The course was organised by the women's branch of the Computer Society of India under its plan to develop and spread computer literacy.

Mrs. Champaka Ramakrishnan, a 56-year-old grandmother, echoed the sentiments of the other participants that they had felt at a loss even during family discussions whenever the topic of computers came up. All of them had felt that the computer, a sophisticated instrument to be kept in an airconditioned room and to be handled only by experts. But within just 10 days, they had become "friendly" with the computer, and had realised that it would respond to multifarious commands like a trusted servant.

Dr. K. Meena, Principal and Head of the Department of Computer Science of the college, said while it had been planned to enrol only 50 housewives for the course as many as 76 had finally registered and several others had been denied admission. The participants were introduced to utilities such as Wordstar, Lotus 1, 2, 3, dBase, III plus using special books prepared to teach adult learners. Within 10 days, the housewives were able to plan the monthly budget, prepare an inventory of grocery items, ascertain household requirements taking into account family size, prepare a list of essentials purchased, and the total expenditure incurred,

# SHRIMATI INDIRA GANDHI COLLEGE

(Nationally Accredited at "A" Grade (3rd Cycle) by NAAC)

Chatram Bus Stand, Tiruchirappalli – 620002.

DINAKARAN 22/1/97

# SHRIMATI INDIRA GANDHI COLLEGE

(Nationally Accredited at "A" Grade (3rd Cycle) by NAAC)

Chatram Bus Stand, Tiruchirappalli – 620002.

# இல்லத்தரசிகளுக்கான கம்ப்யூட்டர் பயிற்சி !

இந்திய கணிப்பொறிக் கழக திருச்சி கிளையின் (CSI - TRICHY CHAPTER) பத்தாவது ஆண்டு நிறைவு விழா திருச்சி ஹோட்டல் ஜென்னி ரெஸிடென்ஸியில் நடைபெற்றது.

விழாவினைத் தொடங்கி வைத்து பெல் நிறுவன பொது மேலாளர் திரு. என். சங்கர் பேசுகையில், "இந்தியாவில் 60,000 வீடுகளில் ஹோம் கம்ப்யூட்டர்கள் நுழைந்துள்ளன. இது இன்னும் இரு ஆண்டுகளில் 4 மடங்காக உயரும். சுமார் 1000 டிரான்ஸாக்ஷன் கொண்ட எந்த தொழில் நிறுவனமும் கம்ப்யூட்டர் வைத்துக் கொள்ளும் நிலை ஏற்பட்டுள்ளது.

இன்டர்நெட் கண்டுபிடிப்பானது, மிக மிக எளிதாக தகவல்களைப் பெறுவதற்கு வழிவகை செய்துள்ளது. எவ்வாறு தகவல்களைப் பெற்றோம் என்பதை விட எவ்வித பிராசசிங் (Processing) செய்தோம், பயன்படுத்தினோம் என்பதுதான் முக்கியமாகும்.

பல்வேறு பிரச்சனைகளை அலசி ஆராய்வதற்கும், செயல்களைக் கண்டறிவதற்கும், முக்கிய நிர்வாக தீர்வுகளை முடிவெடுப்பதற் கும் கம்ப்யூட்டர்களின் பயன்பாடு தற்சமயம் நிறுவனங்களுக்கு தேவையானதாகும்" என்று கூறினார்.

டால்மியா சிமென்ட்ஸ் நிறுவன முழு நேர இயக்குனர் திரு. என். கோபாலசாமி நிகழ்ச்சிக்கு தலைமை வகித்து உரையாற்றும் போது குறிப்பிட்டதாவது, "கம்ப்யூட்டர்கள் தொழிற்சாலை களில் புகுத்தப்படுவதால் வேலை வாய்ப்பு குறையும் என்பது, கட்டுக்கதை என நிருபணமாகி விட்டதுடன், அனைத்து துறைகளி லும் கம்ப்யூட்டர் பயன்பாடு உற்பத்தித் திறனுக்கும் வழி வகுக்கிறது'' என்றார்.




சிஎஸ்ஐ-எக்ஸ்போ'96 கம்ப்யூட்டர் கண்காட்சியினை திருச்சி கிளை தலைவர் திரு. மிஸ்ரா தொடக்கி வைத்தார். அருகில் டாக்டர் கே. மீனா மற்றும் பலர்

சென்னை டாட்டா கன்சல்டன்சி நிறுவனத்தின் செயல் துணைத் தலைவர் திரு. எஸ். மகாலிங்கம் "இன்டர்நெட்" பற்றி குறிப்பிடுகையில், "இன்டர்நெட் என்றாலே இ-மெயில், டேட்டா சரிபார்ப்பு எனப் பல நிறுவனங்கள் நினைக்கின்றன. இது தவறாகும்.

இன்டர்நெட் மூலம் விளம்பரம் செய்வது தற்போதுள்ள 8 சதவீதத்திலிருந்து 33 சதவீதமாகவும், இன்டர்நெட் மூலம் பொருளை விற்பதில் தற்போதுள்ள 5 சதவீதம் 35 சதவீத மாக உயரும். வணிகத்தின் ஓர் அம்சமாக இன்டர்நெட் மாறிவிடும்.

தொழிற்சாலைகளையும், வணிக நிறுவனங்களையும் மேம்படுத்தும் இன்ஃபர்மேஷன் டெக்னாலஜி என்கிற மாபெரும் தொழில்நுட்பம், ஒருசில குறிப்பிட்ட மாநகரங்களில் மட்டும் நின்றுவிடாமல், அனைத்து இடங்களிலும் பயன்பெறத்தக்க வகையில் வர வேண்டும்" என்றார்.

முன்னதாக, திருச்சி மண்டல பொறியியல் கல்லூரி முதல்வரும், திருச்சி கிளை் சி.எஸ்.ஐ. தலைவருமான திரு. கே.எல்.பி. மிஸ்ரா தம் 'வரவேற்புரையில், "இந்திய கணிப்பொறிக் கழகம் கம்ப்யூட்டர் கல்வியில் குறிப்பிடத் தக்க சாதனையை நிகழ்த்தியுள்ளது, குறிப்பாக திருச்சி கிளை 350 உறுப்பினர்களையும், 3198 மாணவ உறுப்பினர்களையும் தன்னகத்தே கொண்டு செயல்படுகிறது" என்றார்.

திருச்சி இந்திராகாந்தி கல்லூரியின் முதல்வர் டாக்டர் கே. மீனா இது குறித்து பேசுகையில், "இந்தியாவிலுள்ள 65 கிளைகளில், திருச்சி கிளை மட்டுமே மிக அதிக உறுப்பினர்கள் எண்ணிக்கையுடன் செயல்படுகிறது எனவும், திருச்சி கிளை சார்பாக 14 மாணவர் கிளைகள், கம்ப்யூட்டர் கருத்தரங்கம், குறுகிய கால பயிற்சிகள் தவிர கிராமப்புற மக்களிடையே கம்ப்யூட்டர் விழிப்புணர்வு, கம்ப்யூட்டர் வினாடி வினா, இல்லத்தரசிகளுக்கான கம்ப்யூட்டர் பயிற்சி என பல்வேறு செயல்பாடுகளைச் சாதனையாக்கி, மிகச் சிறந்த மாணவக் ·கிளைக்கான (India's Best student Chapter Award) பரிசினை தொடர்ந்து பல ஆண்டுகளாக

# SHRIMATI INDIRA GANDHI COLLEGE

(Nationally Accredited at "A" Grade (3rd Cycle) by NAAC)

Chatram Bus Stand, Tiruchirappalli – 620002.

# TAMIL COMPUTER 13 /1/97 TO 26/1/97

### திருச்சி இந்திராகாந்தி கல்லூரியில்:

# மாணவிகளுக்கு "இண்டர்நெட்" பயிற்சி முகாம்!

## பாய்லர் ஆலை பொது மேலாளர் கோபாலகிருஷ்ணன் துவக்கி வைக்கிறார்!!

திருச்சி, ஜன. 22-
திருச்சி இந்திராகாந்தி கல்லூரியில் நடைபெற இருக்கும் மாணவிகளுக்கான "இண்டர்நெட்" பயிற்சி முகாமை பாய்லர் ஆலை பொதுமேலாளர் கோபாலகிருஷ்ணன் துவக்கி வைக்கிறார்.

**இண்டர்நெட்**

கம்ப்யூட்டர் துறையின் தற்போதைய வளர்ச்சியான "இண்டர்நெட்" தற்போது உலகம் முழுவதும் பரவி வருகிறது. உலகில் உள்ள கம்ப்யூட்டர்கள் அனைத்தையும் தகவல் தொடர்பு சாதனங்களோடு வலைபோல இணைத்ததற்கு "இண்டர்நெட்" என்று பெயர்.

**பயிற்சி முகாம்**

இந்த "இண்டர்நெட்" என்றால் என்ன? அதை எப்படி இயக்குவது என்பது பற்றிய பயிற்சி முகாம் ஒன்றை திருச்சி ஸ்ரீமதி இந்திராகாந்தி கல்லூரி நடத்துகிறது. இந்த ஒருநாள் பயிற்சி முகாமில் சுமார் 150 மாணவிகள் கலந்து கொள்கிறார்கள்.

**துவக்க விழா**

இதன் துவக்கவிழா வருகிற 24-ந்தேதி (வெள்ளிக்கிழமை) நடக்கிறது. விழாவுக்கு திருச்சி வருமானவரித்துறை துணை ஆணையர் பி.ரகு தலைமை தாங்குகிறார். பாய்லர்ஆலை கூடுதல் பொது மேலாளர் டாக்டர் வி.கோபாலகிருஷ்ணன் முகாமை துவக்கி வைத்து பேசுகிறார்.

முன்னதாக "இண்டர்நெட்" இணைப்பின் தமிழ்நாடு பிரிவின் செயலாளர் பி.சந்திரசேகரன் வரவேற்கிறார். முடிவில் கல்லூரி முதல்வர் கே.மீனா நன்றி கூறுகிறார்.

இதற்கான ஏற்பாடுகளை இந்திராகாந்தி கல்லூரியின் கம்ப்யூட்டர் அறிவியல்துறையும், சர்வதேச இண்டர்நெட் இணைப்பின் தமிழ்நாடு பிரிவும் செய்துள்ளது.

---

**நேதாஜி பிறந்தநாள்:**

## 23–ந்தேதி அரசு விடுமுறை!

சென்னை, ஜன. 22-
தமிழக அரசு வெளியிட்டுள்ள அரசு உத்தரவில் கூறி இருப்பதாவது:-

நேதாஜி சுபாஷ்சந்திரபோஸ் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு தமிழக அரசு நிறுவனங்களுக்கும் அலுவலகங்களுக்கும் வருகிற 23-ந்தேதி விடுமுறை அளிக்கப்படுகிறது. சம்பளத்துடன்கூடிய விடுமுறையாக இது இருக்கும்.

இவ்வாறு கவர்னர் உத்தரவின்பேரில் தலைமை செயலாளர் கே.ஏ.நம்பியார் இதை தெரிவித்து உள்ளார்.

---

**தினப்**

**இன்று**

**புதன்கிழமை**

**(22-1-97)**

தாது வருடம் தை மாதம் 9-ந்தேதி புதன்கிழமை வளர்மதி சதுர்த்தசி இரவு மணி 7 வரை பிறகு பவுர்ணமி புனர்பூசம் நட்சத்திரம், சித்தயோகம் நாள் முழுவதும்.

ராகுகாலம் பகல் மணி 1... முதல் 1.30 வரை. எமகண்டம் ...

## DINAMALAR 24/1/97

# இந்திராகாந்தி கல்லூரியில் இன்டர்நெட் கருத்தரங்கு

திருச்சி, ஜன.,24—

திருச்சி இந்திராகாந்தி கல்லூரியில் 24-ம் தேதி இன்டர்நெட் பற்றிய ஒரு நாள் கருத்தரங்கு நடக்கிறது.

தமிழக நிதி ஏற்பாட்டு நிறுவனம் மற்றும் இந்திராகாந்தி கல்லூரி கம்ப்யூட்டர் சொஸைட்டி கிளை சார்பில் இந்த கருத்தரங்கு நடக்கிறது.

அறிவியல் உலகம் முன்னேறி வரும் இச்சூழலில் இன்டர்நெட் வசதி மேலும் ஒரு மைல்கல். இந்த வசதி மூலம் உலகநாடுகள் ஐநூறுக்கும் மேற்பட்ட பல்கலைகள் மற்றும் அதில் உள்ள துறைகள் மருத்துவம், பொறியியல் மற்றும் தொழில் நுட்பம் பற்றிய தகவல்களை பெற இயலும். குறிப்பாக உயர் கல்வி மாணவர்களுக்கு இது மிகுந்த பயனை தரும்.

இத்தகைய இன்டர்நெட் வசதி பற்றியும் அதன் செயல்பாடுகள் பற்றியும் ஒரு நாள் கருத்தரங்கு வருகிற 24-ம் தேதி இந்திரா காந்தி கல்லூரியில் நடக்கிறது. கருத்தரங்கை திருச்சி வருமான வரி துணை ஆணையர் டாக்டர் பி.ரகு தொடங்கி வைக்கிறார். பெல் கூடுதல் பொதுமேலாளர் டாக்டர் வி.கோபாலகிருஷ்ணன் கலந்து கொள்கிறார்.

இக்கருத்தரங்கில் சுமார் நூற்றுக்கும் மேற்பட்ட மாணவிகள் கலந்து கொள்கின்றனர். கருத்தரங்கு ஏற்பாடுகளை கல்லூரி முதல்வர் டாக்டர் மீனா மற்றும் பலர் செய்து வருகின்றனர். இந்த இன்டர்நெட் கருத்தரங்கு முதன்முறையாக நடத்தப்படுகிறது. தேவைபடுமெனில் மீண்டும் நடத்தப்படும் என்றும் டாக்டர் மீனா தெரிவித்துள்ளார்.

DINAKARAN 27/1/97

# இன்டர்நெட பயிலரங்கம்

திருச்சி, ஜன.27–

திருச்சி இந்திராகாந்தி கல்லூரியின் கணிப்பொறித் துறையும் தமிழ்நாடு நிதி நிறுவனமும் இணைந்து "நீங்களும் இன்டர்நெட்டும்" என்ற தலைப்பின் கீழ் ஒருநாள் பயிலரங்கத்தை நடத்தினர்.

இதன் தொடக்க விழா நடைபெற்றது. விழாவில் கல்லூரி முதல்வரும் கணிப்பொறித்துறையின் தலைவரும், மற்றும் இந்த பயிலரங்கத்தின் அமைப்பாளருமான டாக்டர் கே.மீனா முதன்மை விருந்தினர்களையும் சிறப்பு விருந்தினர்களையும் வரவேற்று பேசினார். மாணவ-மாணவிகளுக்கு இன்றும் என்றும் முக்கியமாக எதிர்காலத்திலும் இன்டர்நெட் எவ்வாறு உதவும் என்பதை கூறினார் இன்டிராநெட் மற்றும் இன்டர்நெட்டின் இன்றியமையாத பங்கை பற்றியும் கூறினார். தேசிய கல்லூரியின் நிர்வாக குழுவின் செயலாளர் கே.சந்தானம் மற்றும் நிர்வாக குழு உறுப்பினர்களும் விழாவில் பங்கேற்றனர்.

திருச்சி வருமானவரித் துறையின் துணை ஆணையர் டாக்டர் ரகு துவக்கவுரையாற்றினார். திருச்சி பாரதமிகுமின் நிறுவனத்தின் கூடுதல் பொது மேலாளர் டாக்டர் கோபால கிருஷ்ணன் இன்டர்நெட்டின் முக்கியத்துவத்தை நகைச்சுவையுடன் விளக்கினார். தமிழ்நாடு நிதி நிறுவனத்தின் செயலரும் மற்றும் பொருளாளருமான பி.சந்திரசேகர் இன்டர்நெட்டின் வரலாற்றை பற்றி கருத்துக்களை கூறினார். பி.சீனிவாசன் மற்றும் பி.கந்தசாமி இருவரும் விளக்க துவக்கவுரை நிகழ்த்தினர். விழாவில் செய்முறை விளக்கங்கள் விளக்கப்படங்களுடன் காண்பிக்கப்பட்டன. நேரடி விளக்கங்களும் அளிக்கப்பட்டன. பார்வையாளர்களின்சந்தேகங்களுக்கும், வினாக்களுக்கும் சரியான விளக்கங்களும் பதில்களும் தெரிவிக்கப்பட்டன.

மாணவ மாணவிகள் இந்த பயிலரங்கத்தின் மூலம் மிகவும் ஊக்குவிக்கப்பட்டனர் என்பது இதன் சிறப்பு அம்சமாகும்.

## DINAMANI 1/2/97

# எளியோருக்கும் இன்டர்நெட் வசதிதரும் "ஜாவா"

திருச்சி, ஜன. 31-

இன்டர்நெட் வசதியைப் பெற, சாப்ட்வேர் திறன் அதிகம் கொண்ட கணிப்பொறிகள் இல்லாமல் தேவைப்படும் சாப்ட்வேரை வாங்கிக் கொண்டு, தேவைப்படும் தகவலை இன்டர்நெட்டில் அறிய உதவும் "ஜாவா" (JAVA) தொழில்நுட்பம் தற்போது கணிப்பொறி தொழில்நுட்பத்தின் புதிய போக்காக இருக்கிறது என்று எழுத்தாளர் சுஜாதா கூறினார்.

எழுத்தாளரும், கணிப்பொறி வல்லுநருமான திருச்சி, ஸ்ரீமதி இந்திரா காந்தி கல்லூரியில் வியாழக்கிழமை நடந்த நிகழ்ச்சியில் "தகவல் தொழில் நுட்பத்தில் தற்போதைய போக்குகள்" என்ற தலைப்பில் அவர் பேசினார்.

இன்டர்நெட் என்பது எப்படி அமெரிக்கா ராணுவத்தில் டார்ப்பாநெட், ஆர்ப்பாநெட் என்று மாறி, இ-மெயில் பிரபல்யமானபோது இன்டர்நெட்டாக மாறியது என்பதை விவரித்தார்.

கணிப்பொறியில் எல்லா விதமான சாப்ட்வேரையும் வைத்திருந்தாலும் குறிப்பிட்ட தகவலுக்கு பயன்படுத்தப்படும் சாப்ட்வேர் குறைந்த தேவைதான். கணிப்பொறித் தொழிலில் பில் கேட் போன்றவர்களுடன் தொழில்போட்டியில் இருக்கும் சன்மைக்ரோ சர்வீஸ் இந்த ஜாவா ஸ்கிரிப்ட்டை உருவாக்கியுள்ளது.

ஜாவா தொழில்நுட்பத்தில் சாப்ட்வேரை இறக்குமதி செய்து அதன்மூலம் இன்டர்நெட் தொடர்பு கொள்ள முடியும். இதற்கு மானிட்டர் (கணிப்பொறி திரை) தேவையில்லை. வீட்டிலிருக்கும் தொலைக்காட்சிப் பெட்டியை மானிட்டராக பயன்படுத்திக் கொள்ளலாம். மிகக் குறைந்த திறன் கொண்ட சாப்ட்வேர் மட்டும் வைத்துக் கொண்டால் போதுமானது. தேவையான சாப்ட்வேரை, ஜாவா இணைப்பு மூலம் "டவுன் லோட்" செய்து கொண்டு, தேவைப்படும் தகவலை இன்டர்நெட் மூலம் பெற முடியும். இதற்கு செலவும் குறைவு. சாதாரண வாடிக்கையாளர்களுக்கு இந்த ஜாவா தொழில் நுட்பம் உதவுகிறது.

இன்டர்நெட் மூலம் வர்த்தகம் செய்வதில் இத்தனை காலம் தயக்கம் இருந்ததற்கு காரணம் கடவுச்சொற்களை (பாஸ்வேர்டு) மாற்றார் கண்டு பிடித்துவிடும் வாய்ப்புகள் இருந்தன என்பதுதான். ஆனால் இப்போது "ஆஎஸ்ஏ" என்ற புதிய முறையில் யாரும் புத்திசாதுர்யத்தால் கண்டறிய முடியாத பாஸ்வேர்ட்களை எண்களால் அமைத்துக் கொள்ள முடியும்.

அமெரிக்காவில் உட்கார்ந்த இடத்தில், வெறும் கணிப்பொறியை மட்டும் வைத்துக் கொண்டு லட்சக்கணக்கான புத்தகங்களை விற்பனை செய்ய முடிகிறது.

அந்த விற்பனையாளர் புத்தகங்களின் பட்டியல், புத்தகங்கள் அதன் ஆசிரியர்கள் பற்றிய படத்தொகுப்புகள், புத்தகத்தின் மதிப்புரைகள், புத்தகத்தின் சில அத்தியாயங்கள் ஆகியவற்றை தயார்நிலையில் (சாப்ட்வேரில்) வைத்திருப்பார்.

புத்தகம் வாங்குபவர் அந்த புத்தகத்தை வாங்க நினைத்து ஆர்டர் கொடுத்தால் அவரது கிரடிட் கார்டு எண் மட்டும் குறித்து கேட்டு குறித்துக் கொள்ளப்படும். தொடர்புடைய பதிப்பகத்தார் மூலம் அந்த புத்தகம், ஆர்டர் கொடுத்தவரின் வீட்டுக்கு வந்துவிடும். ஒரு கணிப்பொறியை வைத்துக் கொண்டு மிகப்பெரிய புத்தகக் கடையையே நடத்தமுடிகிறது.

புரோகிராம் எழுதும் முறைகளில் தற்போது சி-பிளஸ் மொழியை மகளிர் கற்றுக் கொள்ள வேண்டும் என்று வலியுறுத்திய அவர், "நான் பார்த்தவரை ஆண்களை விட பெண்களால் கணிப்பொறி புரோகிராம்களை சிறப்பாகச் செய்ய முடியும். ஆனால் அவர்களிடம் உள்ள பிரச்சினை, கல்யாணம் செய்து கொண்டு போய்விடுகிறார்கள்" என்றார் சுஜாதா.

நிகழ்ச்சிக்கு கல்லூரியின் செயலர் கே.சந்தானம் வரவேற்றார். முதல்வர் டாக்டர் கே. மீனா நன்றி தெரிவித்தார்.

DINABOOMI 19/10/97



திருச்சி இந்திரா காந்தி கல்லூரியில் கணிப்பொறி போட்டி துவக்க விழாவில் வருமானவரித்துறை ஆணையர் எஸ்.என்.மூர்த்தி பேசியபோது எடுத்த படம். அருகில் 'பிம்' இயக்குனர் ஜெயசங்கரன், பெல் பொது மேலாளர் கோபாலகிருஷ்ணன், தேசிய கல்லூரி கவுன்சில் செயலாளர் சந்தானம், கல்லூரி முதல்வர் மீனா, சி.எஸ்.ஐ. செயலாளர் சேகர் ஆகியோர் உள்ளனர்.

# இந்திரா காந்தி கல்லூரியில் கணிப்பொறி போட்டிகள் துவக்கம்

திருச்சி, அக்.19-

பள்ளி, மற்றும் கல்லூரிகளுக்கிடையேயான கணிப்பொறி தொடர்பான போட்டிகள் இந்திரா காந்தி கல்லூரியில் துவங்கின.

இந்திய கணிப்பொறி மையத்தின் இந்திரா காந்தி கல்லூரிப்பிரிவும் திருச்சி கணிப்பொறி மையமும் இணைந்து நடத்தும் பள்ளி மற்றும் கல்லூரிகளுக்கிடையேயான கணிப்பொறி போட்டி துவக்க விழா கல்லூரி வளாகத்தில் நேற்று நடைபெற்றது.

விழாவிற்கு தேசிய கல்லூரி கவுன்சிலின் செயலாளர் சந்தானம் தலைமை தாங்கினார். விழாவில் திருச்சி வருமான வரித்துறை ஆணையர் எல்.எஸ்.என்.மூர்த்தி கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றினார்.

மேலும் இவ்விழாவில் பாரதி தாசன் மேலாண்மைக்கழக இயக்குனர் ஜெயசங்கரன், கல்லூரி முதல்வர் மீனா ஆகியோர் பேசினார்கள்.

முன்னதாக பாரத மிகுமின் நிறுவன பொதுமேலாளரும் திருச்சி இந்திய கணிப்பொறி மையத்தின் தலைவருமான கோபாலகிருஷ்ணன் வரவேற்று பேசினார்.

முடிவில் செயலாளர் சேகர் நன்றி கூறினார்.


வர்த்தக பூமி படியுங்கள்

## MALAIMURASU 20/10/97



### இந்திராகாந்தி கல்லூரியில்

# கணிப்பொறிவிழா!

திருச்சி, அக். 20-

சி.எஸ்.ஐ. திருச்சி பிரிவும், ஸ்ரீமதி இந்திராகாந்தி கல்லூரி, சி.எஸ்.ஐ. மகளிர் பிரிவும் இணைந்து நடத்தும் பள்ளிகள் மற்றும் கல்லூரிகளுக்கு இடையேயான கணிப்பொறி தொடர்பான போட்டிகள் கல்லூரி வளாகத்தில் நடைபெற்றது.

விழாவிற்கு கல்லூரியின் செயலர் கே. சந்தானம் தலைமை ஏற்றார். கல்லூரி முதல்வர் கே. மீனா சி.எஸ்.ஐ. மகளிர் பிரிவின் கடந்த வருட செயல்பாடுகள் குறித்து அறிக்கை வாசித்தார்.

'பிம்' இயக்குனர் என். ஜெயசங்கரன் விழாவை தொடங்கி வைத்தார். வருமானவரித்துறை ஆணையர் எஸ்.எஸ்.என். மூர்த்தி சிறப்புரை ஆற்றினார்.

திருச்சி சி.எஸ்.ஐ. தலைவரும், பி.எச்.இ.எல். பொது மேலாளருமான வி. கோபாலகிருஷ்ணன் அனைவரையும் வரவேற்றார். சி.எஸ்.ஐ. அமைப்பின் செயலர் சேகர் நன்றி கூறினார்.

**SHRIMATI INDIRA GANDHI COLLEGE**

(Nationally Accredited at "A" Grade (3rd Cycle) by NAAC)

Chatram Bus Stand, Tiruchirappalli – 620002.

# DINAMALAR 21/10/97



திருச்சி இந்திராகாந்தி கல்லூரியில் நடந்த கணிப்பொறி விழா போட்டியில் வெற்றி பெற்ற பிஷப் ஹீபர் கல்லூரி மாணவர்களுக்கு கலெக்டரின் மனைவி கல்யாணி பரிசுகளை வழங்குகிறார். அருகில் கலெக்டர் ராஜாராமன், கல்லூரி முதல்வர் டாக்டர் மீனா ஆகியோர்.

## கல்லூரிகளுக்கான கணிப்பொறி போட்டி

திருச்சி, அக்.21—

இந்திராகாந்தி கல்லூரியின் சி.எஸ்.ஐ மகளிர் பிரிவும் சி.எஸ்.ஐ திருச்சி பிரிவும் இணைந்து பள்ளி மற்றும் கல்லூரிகளுக்கிடையிலான கணிப்பொறி தொடர்பான பல்வேறு போட்டிகளை ஏற்பாடு செய்திருந்தனர்.

கடந்த 18, 19, 20 ஆகிய தேதிகளில் நடந்த இந்த மூன்று நாட்கள் விழாவின் தொடக்க விழா 18ம் தேதி கல்லூரியின் செயலர் சந்தானம் தலைமையில் இயக்குனர் பிஜஎம் இயக்குனர் ஜெயசங்கரால் துவக்கி வைக்கப்பட்டது. வருமானவரித்துறை ஆணையர் மூர்த்தி சிறப்புரையாற்றினார். விழா ஏற்பாடுகளை சிஎஸ்ஐ திருச்சி பிரிவின் துணைத்தலைவரும், கல்லூரி முதல்வருமான டாக்டர் மீனா, செயலர் சேகர் உறுப்பினர்கள் மணிமேகலை, ஜெயந்தி மற்றும் கல்லூரியின் கணிப்பொறித்து

ஒவ்வொரு போட்டிகளிலும் முதல் மூன்று நபர்களுக்குப் பரிசு வழங்கப்பட்டது. போட்டிகளில் பங்கேற்ற பள்ளிகளில் அதிக புள்ளிகளைப் பெற்ற ஆர்எஸ்கே மேல்நிலைப்பள்ளியும், கல்லூரிகளில் அதிகப் புள்ளிகளைப் பெற்ற பிஷப் ஹீபர் கல்லூரியும் கேடயம் பெற்றனர். சிறப்புத் தனிநபர் பரிசை பிஷப் ஹீபர் கல்லூரியைச் சேர்ந்த மாணவர் ப்ரதீப் வென்றார்.

இப்போட்டிகளின் நிறைவு விழா 20ம் தேதி கல்லூரி வளாகத்தில் நடைபெற்றது. கலெக்டர் ராஜாராமன் பேசினார். அவர் துணைவியார் கல்யாணி வெற்றி பெற்ற மாணவர்களுக்குப் பரிசுகளையும் சான்றிதழ்களையும் வழங்கினார். சி.எஸ்.ஐ திருச்சி பிரிவின் துணைத்தலைவரும், கல்லூரி முதல்வருமான மீனா வரவேற்றார்.

# SHRIMATI INDIRA GANDHI COLLEGE

(Nationally Accredited at "A" Grade (3rd Cycle) by NAAC)

Chatram Bus Stand, Tiruchirappalli – 620002.

## DINAKARAN 21/10/97

திருச்சியில்

# 3 நாள் கம்ப்யூட்டர் போட்டி

## வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசு

திருச்சி, அக்.21– திருச்சி கம்ப்யூட்டர் போட்டி 3 நாள் நடந்தது. இதில் வெற்றி பெற்ற கல்லூரி, பள்ளி மாணவர்களுக்கு கலெக்டர் மனைவி பரிசு, சான்றிதழ் வழங்கினார்.

**போட்டி**

திருச்சி இந்திரா காந்தி கல்லூரி சி.எஸ்.ஐ. (இந்திய கம்ப்யூட்டர் கழக) மகளிர் பிரிவும் சி.எஸ்.ஐ. திருச்சி பிரிவும் இணைந்து பள்ளி மற்றும் கல்லூரிகளுக்கிடையிலான கம்ப்யூட்டர் தொடர்பான பல்வேறு போட்டிகளை ஏற்பாடு செய்திருந்தது. விழாவை கல்லூரி செயலாளர் கே.சந்தானம் தலைமையில் பிம் இயக்குனர் ஜெயசங்கர் தொடங்கி வைத்தார். வருமான வரித்துறை ஆணையர் மூர்த்தி சிறப்புரையாற்றினார்.

17 பள்ளி 10 கல்லூரிகளிலிருந்தும் 175–க்கும் மேற்பட்ட மாணவர்கள் பங்கேற்றனர். அனைத்து போட்டிகளிலும் மாணவர்கள் வியக்கத் தக்க வகையில் தங்களது திறமைகளை வெளிப்படுத்தினார்கள்.

**பரிசு**

கம்ப்யூட்டர் தொடர்பான இதர போட்டிகளிலும் சிறப்பாக பங்கேற்றனர். ஒவ்வொரு போட்டிகளிலும் முதல் 3 பேருக்கு பரிசு வழங்கப்பட்டது. போட்டிகளில் பங்கேற்ற பள்ளிகளில் அதிக புள்ளிகளைபெற்ற ஆர்.எஸ்.கே.மேல்நிலைப் பள்ளியும், கல்லூரிகளில் அதிக புள்ளிகளைப் பெற்ற பிஷப்ஹீபர் கல்லூரியும் கேடயத்தை தட்டிச் சென்றனர். சிறப்புத் தனி நபர் பரிசை பிஷப்ஹீபர் கல்லூரியை சேர்ந்த மாணவர் ஜே.பிரதிப் பெற்றார்.

**நிறைவுவிழா**

3 நாள் போட்டிகளில் நிறைவு விழா நேற்று (திங்கள்) மாலை கல்லூரிவளாகத்தில் நடைபெற்றது. சிறப்பு விருந்தினராக திருச்சி மாவட்ட கலெக்டர் க.ராஜாராமன் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார். அவர் துணைவியார் கல்யாணி ராஜாராமன் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசுகளையும், சான்றிதழ்களையும் வழங்கினார். வந்திருந்த அனைவரையும் சி.எஸ்.ஐ. திருச்சிபிரிவின் துணைத் தலைவரும், கல்லூரி முதல்வருமான டாக்டர். கே.மீனா வரவேற்றார்.

முன்னதாக இத்தகைய போட்டிகளை ஏற்பாடு செய்து நடத்துவதில் தங்களுக்கு ஏற்படும் அனுபவங்களை மாணவி ராஜேசுவரி எடுத்துரைத்தார். இத்தகைய போட்டிகளில் கலந்து கொள்வதன் மூலம் தங்களது திறமையை வெளிப்படுத்த வாய்ப்பு கிடைப்பது மட்டுமல்லாது தங்களது திறமையையும் அறிவையும் வளர்த்துக் கொள்ளவும் ஊக்கமும், உற்சாகமும் ஏற்படுகிறது. என்று பங்கேற்ற மாணவர்கள் கருத்து தெரிவித்தார்கள் முடிவில் ஜெயந்தி நன்றி கூறினார். விழாவில் சி.எஸ்.ஐ. தலைவர் கோபாலகிருஷ்ணன் மற்றும் உறுப்பினர்கள் கலந்து கொண்டார்கள்.

**ஏற்பாடு**

விழா ஏற்பாட்டினை சி.எஸ்.ஐ. திருச்சி பிரிவின் துணைத்தலைவரும் கல்லூரி முதல்வருமான டாக்டர். கே.மீனா செயலாளர் சேகர் உறுப்பினர்கள் மணிமேகலை, ஜெயந்தி மற்றும் கல்லூரியின் கணிப்பொறித் துறையினர் ஆகியோர் செய்திருந்தனர்

இந்த மாதம் 25 மற்றும் 26–ந்தேதிகளில் தஞ்சையில் நடைபெறுகிறது. இதில் 20 மாநிலங்களை சேர்ந்த 900 வீரர்கள் கலந்துகொள்கின்றனர்.

பந்தய டைரக்டராக சிகான் ஆர்.ஏ.கோவிந்தராஜ் உள்ளார்.

தலைமை நடுவராக டாக்டர் ரென்ஷி ரத்தினம் உள்ளார். பந்தய அமைப்பாளராக சென்சாய் மதியழகன் இருக்கிறார்.

சிறுவர்களுக்கு

## பில்லியர்ட்ஸ் பயிற்சி அகாடமி

சென்னை, அக். 21– சென்னை கோபாலபுரத்தில் உள்ள ராஜ் வளாகத்தில் சிறுவர்கள் பில்லியர்ட்ஸ் பயிற்சி அகாடமி தொடங்க உள்ளது.

சென்னையில் சிறுவர்களுக்கான முதல் பயிற்சி கழகமான இந்த அகாடமி 31–ந்தேதி மாலை 4 மணிக்கு தொடங்கப்படுகிறது. பயிற்சி அகாடமியை ஆற்காடு இளவரசர் முகமது அலி தொடங்கி வைக்கிறார்.

இந்த பயிற்சி அகாடமிக்கு பில்லியர்ட்ஸ் பாயிண்ட் என்று பெயர். இதனை எடிட் பாயிண்ட் நிறுவனமும், வெளிநாட்டு இந்தியர் வாஷியும் இணைந்து இந்த அகாடமியை உருவாக்கி உள்ளனர்.

பயிற்சி மையத்தில் 12 டேபிள்கள் உள்ளன. 12 மணி நேரத்தில் 300 சிறுவர்கள் பயிற்சி பெறும் வசதி உள்ளது.

# HINDU 24/10/97

# Taking computer to villages


Residents of S.Pudukottai, a small village about 20 km from Tiruchi turned up in hundreds recently to participate in the valedictory function of the 10 day special camp of the NSS students of the Indira Gandhi College.

The students during the 10-day camp organised a computer awareness programme for school children/educated women in the village, held a kolam competition and doll show (bomma kolu) for the villagers, besides a dental camp, an eye camp and a legal clinic. Also a lecture on care for the mentally retarded children was organised by the Holy Cross Service Society. The residents were extremely happy over the exposure they got during the ten days.

The students also felt they had learnt a lot from the villagers, during their participation in the construction of 26 houses for the poor organised by the Society for Education Village Action and Improvement.

The students carried hollow blocks for construction, mixed the cement mortar, and also watered the building daily besides assisting the masons in fixing the blocks.

On Gandhi Jayanthi day, the students cleaned the Sri Chadrasekhara Swamy temple at Tiruchendurai in collaboration with the Archaeology department. K. Meena, Principal of the Indira Gandhi College, who visited the camp almost daily said the students realised the importance of dignity of labour, the togetherness and team work among the village folk and also their progressive views on many matters like literacy, local self government, thrift schemes, etc.



A delighted K. Rangayyan, president of the S. Pudukottai Milk supply society said the students did an extremely good job constructing within ten days a community centre where, the women's cooperative milk society office would be housed. K. Govindarajan, Director of SEVAI, said the volunteers had evinced keen interest in watershed management and the quality of work turned out during the house construction was extremely good.

K. N. Nehru, Minister for Food and Cooperation inaugurated the camp and K. Ramalingam, Director of Collegiate Education presided over the valedictory function.

The NSS students of the Seethalakshmi Ramaswami College, Tiruchi also organised a 10 day special camp at Kambarasampettai. Watershed management, wasteland development, child labour eradication programme, health, hygiene and nutrition, education, eradication of social evils like alcoholism, were the main areas selected by the students. K. Rajaraman, District Collector, gave away the certificates to the participants at the valedictory function presided over by Mr. R. Panchapakesan, Managing Trustee of the College.

V. GANAPATHY

DINABOOMI 12/11/97

# ஆதிதிராவிட பள்ளி ஆசிரியர்களுக்கு கம்ப்யூட்டர் பயிற்சி முகாம்

திருச்சி, நவ.12-

ஆதிதிராவிடர் பள்ளி ஆசிரியர்களுக்கான கம்ப்யூட்டர் பயிற்சி முகாம் திருச்சியில் நடந்து வருகிறது.

தமிழகம் முழுவதிலும் உள்ள அரசுத் துறைகளை கம்ப்யூட்டர் மயமாக்கும் பணி ஏற்கனவே மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்றும், தற்போது அரசுப் பணியிலுள்ள பலருக்கும் 'கம்ப்யூட்டர்' பற்றிய அறிவு மிகவும் குறைவாக உள்ளது.

கம்ப்யூட்டரை பயன்பாட்டிற்கு கொண்டு வருவதற்காக அரசு அலுவலர்களுக்கு 'கம்ப்யூட்டர்' கல்வி கற்றுத்தரவும், மாவட்டத்திலுள்ள ஆதிதிராவிடர் நல மேல்நிலைப்பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்களுக்கு 'கம்ப்யூட்டர்' கல்வி கற்றுத்தரவும் திருச்சி மாவட்ட நிர்வாகம் ஏற்பாடுகள் செய்துள்ளது.

இத்திட்டத்தின்படி கம்ப்யூட்டர் கல்வி கற்பதற்காக மாவட்டத்தில் உள்ள ஆதிதிராவிடர் மேல் நிலைப்பள்ளிகளில் பணியாற்றும் 30-க்கும் மேற்பட்ட ஆசிரியர்களும் மாவட்ட கலெக்டர் அலுவலகத்தில் பணியாற்றும் 9 பேரும் தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.

இதன் படி தேர்வு செய்யப்பட்ட 41 பேரும் கடந்த 3-ம் தேதி முதல் திருச்சி இந்திராகாந்தி கல்லூரியில் கம்ப்யூட்டர் கல்வி கற்று வருகின்றனர்.

இந்த பணியினை இந்திரா காந்தி கல்லூரியைச் சேர்ந்த பேராசிரியைகள் கட்டணமின்றி சேவை மனப்பான்மையின் அடிப்படையில் செய்து வருகின்றனர்.

இப்பள்ளிகளில் 'கம்ப்யூட்டர்கள்' இன்னும் நிறுவப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

# SHRIMATI INDIRA GANDHI COLLEGE

(Nationally Accredited at "A" Grade (3rd Cycle) by NAAC)

Chatram Bus Stand, Tiruchirappalli – 620002.

# DINAMALAR 27.11.97



திருச்சி இந்திராகாந்தி கல்லூரியில் நடைபெற்ற கம்ப்யூட்டர் பயிற்சி வகுப்பில் கலந்து கொண்ட மாவட்ட கலெக்டர் அலுவலக பணியாளர்கள் மற்றும் பட்டதாரி ஆசிரியர்களுக்கு மாவட்ட கலெக்டர் ராஜாராமன் சான்றிதழ் வழங்கினார். அருகில் கல்லூரி செயலாளர் சந்தானம், கல்லூரி முதல்வர் மீனா, ஆகியோர் உடன் உள்ளனர்.

# THE HINDU 13/2/98



Children learning mathematics at the creativity centre.

## Educating rural children

Weekends are the most exciting period for Shantha and Kamala, two school drop-outs in Perugamani village, about 20 km from Tiruchi. They were forced to stop going to school, since there was no one to look after their goats and their younger brother.

Thus their dreams of studying were shattered. And at that time, they never thought they would get back to school one day. In fact, they felt a twinge of pain everytime they saw others smartly dressed in their uniform going to the local elementary school.

But things have changed now for the two kids, as also 1200 other children in about 30 villages near Pettaivaithalai, with the establishment of the Centre for Creativity for Rural Children. "Arumbugal" is the newly promoted self-help group which is for the benefit of drop-outs.

The new centre aims at giving an opportunity for rural children to learn together. The Society for Village Action and Improvement, (SEVAI) has promoted the Centre for Creativity to provide a chance to little children to learn and use their innate talents in various fields.

The centre has trained staff who teach with the help of charts, models, audio- and-video cassettes, puppets. The children can move from one learning centre to the next according to their choice.

The children attend classes generally lasting 30 minutes before proceeding for the next session. Books on general subjects, video cassettes explaining wildlife, geographical features of the world, adult education, sanitation, role of savings, water conservation, etc are also shown to children. Mathematics is taught to children with models, and the children. The parents, in groups, are asked to visit the centre, at regular intervals, so that they are exposed to the programme and take interest in the education of their children.

The centre is open on all Saturdays and Sundays and a van picks up the children from the villages. Mrs. Kalyani Rajaraman, wife of the district collector inaugurated the centre on the Republic Day. Prof. K. G. Meenakshi, Director, Gandhi Peace foundation stressed the need for allowing children to learn subjects of their choice and at their own pace.

Dr. K. Meena, Principal of the Shrimati Indira Gandhi College wanted the authorities to teach location-specific lessons. She said that since the centre was close to the river Cauvery, the little children could be given lessons in the role of water, role of Cauvery in shaping the cultural heritage of people living on its banks, vital role played by the river as the lifeline of the delta etc.

The parents who visited the centre said that they too learnt a lot when they attended the parents' meetings.

The parents and children are also told about the role of self- help in various fields, like mobilisation of savings, maintenance of the village handpumps, construction of houses, need for maintaining the houses as well as keeping the village environs clean, etc. The members were given two saplings of fruit-bearing trees to plant.

V. GANAPATHI

## Western music concert

DINAKARAN 28/2/98

# SHRIMATI INDIRA GANDHI COLLEGE

(Nationally Accredited at "A" Grade (3rd Cycle) by NAAC)

Chatram Bus Stand, Tiruchirappalli – 620002.

# கலையும்-கம்ப்யூட்டரும் கைகோர்க்கும் கல்லூரி

Dr.K.மீனா முதல்வர் இந்திராகாந்தி கல்லூரி, திருச்சி-2

...ன்றென்ப ஏனை
...தென்ப இவ்விரண்டும்
...ணென்ப வாழும்
...கு"
...றது வள்ளுவர் வாக்கு.
...யின் பெருமையையும்,
...பதையும் மிக அழகாக
...ரைத்துள்ளது.
...நாட்டின் முன்னேற்றம்
...ு பெருமளவில் அந்த
... மக்களின்
...யறிவைப் பொறுத்தே
...யும். அதிலும் குறிப்பாக
...கள் பெறும்

கல்வியறிவானது நாடு முன்னேற விரைவாக வழிவகுக்கும் என்றால் மிகையாகாது. அத்தகைய முன்னேற்றத்திற்குப்பலமான பாதையமைக்கும் பணியில் தம்மை ஈடுபடுத்திக் கொண்டுள்ளது திருமதி இந்திராகாந்தி கல்லூரி.

பெண்களுக்காக என்று 1984 ஆம் ஆண்டு வணிகவியல், கணிதஇயல், கணிப்பொறியியல் என்று மூன்று துறைகளுடன் மட்டுமே தேசிய கல்லூரி நிர்வாகக்குழு உறுப்பினர்களால் துவங்கப்பட்ட இக்கல்லூரியானது இன்று பல்வேறு துறைகளுடன் ஆலவிருட்சமாக வளர்ந்து சிறப்பாகத்திகழ்கிறது. இக் கல்லூரியில் பொருளாதாரம், வங்கி நிர்வாகம், தொழில் நிர்வாகம், வணிகவியல், கணிதஇயல், கணிப் பொறியியல், நுண்ணுயிரியல், தொழில் மின்னணுவியல் ஆகியப்பட்டப் படிப்புகளும் எம்.பி.ஏ., எம்.காம், எம்.சி.ஏ., எம்.எஸ்.ஸி., 'பி.ஜி.டி.சி.ஏ., ஆகியப்பட்ட மேறபடிப்புகளும் உள்ளன. நடப்பு கல்வி ஆண்டில் பயோகெமிஸ்டரி, எம்.பி.எம்., கணிப்பொறித் துறையில் எம்.பில் ஆகிய புதிய வகுப்புகள் துவங்க இருக்கின்றன. மேலும் பிகாம் மாணவியர்க்கு வரிவிதிப்பு முறைகள் தொடர்பான தொழிற்கல்வி வகுப்புகளும் நடத்தப்படுகின்றன.

இருபத்தோராம் நூற்றாண்டை எதிர் நோக்கி இருக்கும் இந்த வேளையில் எங்கும், கம்யூட்டர் எதிலும் கம்யூட்டர் என்று காணப்படும் இந்த 'சூழலில் கணிப்பொறி அறிவு ஒவ்வொருவருக்கும் மிகவும் இன்றியமையாதது. இத்தகைய முக்கியத்துவம் வாய்ந்த இந்த கணிப்பொறித் துறையில் சாதனைகள் படைக்கும் கல்லூரியாக இக்கல்லூரித் திகழ்கிறது. கல்லூரியின் கணிப்பொறி மையம் சுமார் 125 கணிப்பொறிகளைக்கொண்டு நவீன வசதிகளுடன் சிறப்பாக



உபகரணங்களுடனும், வசதிகளுடனும் அமைக்கப்பட்டுள்ளது.

பல்கலைக்கழக தேர்வுகளில் அனைத்துத்துறை மாணவியரும் சிறந்த முறையில் தேர்ச்சி பெறுவதோடு பல்கலைக்கழக அளவில் ரேங்க் பெற்று கல்லூரிக்கு பெருமை சேர்க்கின்றனர். கல்வி மட்டுமின்றி விளையாட்டு, கலை, சமூகசேவை ஆகிய பல்வேறு துறைகளிலும் தனி முத்திரை பதிக்கிறார்கள். கல்லூரியின் மாணவியர் பல்கலைக்கழகங்களுக்கிடையே யான விளையாட்டுக்களிலும், மாவட்ட மற்றும் மாநில அளவிலும் பல்வேறு விளையாட்டுக்களில் பங்கேற்று வெற்றி பெற்றுள்ளனர்.

கலைத்துறையில் இக் கல்லூரி மாணவியர் இசை, நடனம் ஆகியவற்றில் வெளிநாடுகளில் கூட சென்று நிகழ்ச்சிகளில் பங்கேற்றுள்ளனர். கல்லூரிகளுக்கிடையேயான போட்டிகளிலும், கலந்து கொண்டு வெற்றி பெற்றுள்ளனர்.

நாட்டு நலனுக்கு ஏதாவது செய்ய வேண்டும் என்ற உன்னத நோக்குடன் நாட்டு நலப்பணித்திட்டம், ரோட்டரி, செஞ்சிலுவைச்சங்கம் ஆகிய அமைப்புகளுடன் தம்மை ஆர்வமுடன் இணைத்துக் கொள்கின்றனர். வழக்கமான திட்டப்பணிகளுடன் கிராம முன்னேற்றம், கிராமப்புற மக்களுடைய தேவைகளை

# SHRIMATI INDIRA GANDHI COLLEGE

(Nationally Accredited at "A" Grade (3rd Cycle) by NAAC)

Chatram Bus Stand, Tiruchirappalli – 620002.

## INDIAN EXPRESS 30.5.98

# Stress on importance of computer studies

EXPRESS NEWS SERVICE

**Madurai, May 29:** Computer studies must be deemed as 'value added education' and linked with regular curriculum of inter-disciplinary subjects, Dr.K.Meena, Principal and Head of Department of Computer Studies, Srimathi Indira Gandhi College, Tiruchi, said on Friday.

Delivering a lecture on 'Trends in Information Technology', organised here by The Institution of Engineers, Madurai, she urged for coordination among 'internet users clubs' in various parts of the country to facilitate easy exchange of information.

Observing that the use of computers was being increasingly felt in the day-to-day activities of man, Meena said that the basic purpose of 'internet' was effective communication.

She delved on the software module prepared by Post-Graduate students of computer science at the Srimathi Indira Gandhi College specifically for the benefit of rural populace apart from deaf and mentally retarded children.

Meena said that with the advent of lap-top computers, it has become easy for man to monitor multifarious activities. Computers, she stressed, must be considered a good friend of man and pointed that the aura of fright and sophistication surrounding the study of computers must be removed.

It is certain that in five years from now, all human activities would be associated with computers. Man's future will literally be programmed by the combination of telephone, modem and Personal Computer, she observed.

However, she did not subscribe to the view that man has become lazy due to computers, saying that computers in fact simulates human brain rather than replacing human activity. She felt that the study of computers must pertain to the area of need of the individual.

Noting that taking computers to the rural areas must be given prime importance, she spoke of its use to housewives in managing households by planning activities right from monthly budget to interior designing, etc.

Meena pointed that the computers could also be used in maintaining records of courts, hospital administration and revolutionize the administration methods of governments and corporate bodies. Computer is in fact an agent for fundamental change in the society, she added.

## DINAKARAN 31/5/98

# கணிப்பொறி வளர்ச்சியில் இந்திரா காந்தி கல்லூரி

(K.மீனா, முதல்வர்)

"எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும் கண்ணென்ப வாழும் உயிர்க்கு" என்ற வள்ளுவர் வாக்கு, கல்வியின் பெருமையையும், அவசியத்தையும் மிக அழகாக எடுத்துரைக்கின்றது.

ஒரு நாட்டின் முன்னேற்றம் என்பது பெருமளவில் அந்த நாட்டு மக்களின் கல்வியறிவைப் பொறுத்தே அமையும். அதிலும் குறிப்பாகப் பெண்கள் பெறும் கல்வியறிவானது நாடு முன்னேற விரைவாக வழிவகுக்கும் என்றால் மிகையாகாது. அத்தகைய முன்னேற்றத்திற்குப் பலமான பாதையமைக்கும் பணியில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டுள்ளது திருமதி இந்திரா காந்தி கல்லூரி.

பெண்களுக்காக என்று 1984 ஆம் ஆண்டு வணிகவியல், கணிதவியல், கணிப்பொறியியல் என்று மூன்று துறைகளுடன் மட்டுமே தேசிய கல்லூரி நிர்வாகக்குழு உறுப்பினர்களால் துவங்கப்பட்ட இக்கல்லூரியானது இன்று பல்வேறு துறைகளுடன் ஆலவிருட்சமாக வளர்ந்து சிறப்பாகத் திகழ்கிறது. இக்கல்லூரியில் கம்யூட்டர் சயின்ஸ், கணிதம், இயற்பியல், மைக்ரோ பயாலஜி, பயோ கெமிஸ்ட்ரி, இண்டஸ்ட்ரியல் எலக்ட்ரானிக்ஸ், பொருளாதாரம், பி.காம், பி.பி.ஏ., பி.பி.எம். போன்ற பட்ட வகுப்புகளும், எம்.காம், எம்.சிஏ, எம்.எஸ்.சி, எம்.பி.ஏ, எம்.பில் (கம்யூட்டர் சயின்ஸ்) போன்ற பட்ட மேற்படிப்பு வகுப்புகளும்



உள்ளன.

நடப்புக் கல்வியாண்டில் கம்ப்யூட்டர் துறையில் பல்கலைக்கழக ஒப்புதலுடன் பி.சி.ஏ (B.C.A) வகுப்புகளும் துவங்க இருக்கின்றன. மேலும் பி.காம் (B.Com) மாணவியர்க்கு வரிவிதிப்பு முறைகள் தொடர்பான தொழிற்கல்வி வகுப்புகளும் நடத்தப்படுகின்றன.

இருபத்தோராம் நூற்றாண்டை எதிர் நோக்கி இருக்கும் இந்த வேளையில், எங்கும் கம்ப்யூட்டர், எதிலும் கம்ப்யூட்டர் என்று காணப்படும் இந்தச் சூழலில் கணிப்பொறி அறிவு ஒவ்வொருவருக்கும் மிகவும் இன்றியமையாதது. இத்தகைய முக்கியத்துவம் வாய்ந்த இந்த கணிப்பொறித் துறையில் சாதனைகள் படைக்கும் கல்லூரியாக இக்கல்லூரி திகழ்கிறது. கல்லூரியின் கணிப்பொறி மையம் சுமார் 153 கணிப்

வசதிகளுடன் சிறப்பாக வடிவமைக்கப்பட்டுள்ளது.

கணிப்பொறிக் கல்வி என்பது நகரத்தார்க்கு மட்டுமே, என்று நினைத்து ஏக்கத்துடன் வாழும் கிராமப்புற மக்களிடத்தும் கணிப்பொறியை அறிமுகப்படுத்தி அங்குள்ள பள்ளிக் குழந்தைகளுக்கு கணிப்பொறியை இயக்குவதில் பயிற்சி அளிப்பதன் மூலம் அவர்களிடையே விழிப்புணர்வையும், ஈடுபாட்டையும் உண்டாக்கிய பெருமை இக்கல்லூரியின் கணிப்பொறித் துறையையே சாரும்.

வேலைக்குச் செல்லாமல் வீட்டில் இருக்கும் இல்லத்தரசிகளின் தாழ்வு மனப்பான்மையை நீக்கும் வகையில் கணிப்பொறியின் மூலம் வீட்டு நிர்வாகம், வரவு செலவுப் பட்டியல் தயாரித்தல், பல்வகைச்செய்தித் தொடர்பு (Multi-Media) ஆகிய பண்பாடுகளை அறிந்து கொள்ள ஏதுவாக குறுகிய காலக் கணிப்பொறி வகுப்புகளை ஏற்பாடு செய்து, பெருமளவிலான வரவேற்பைப் பெற்றது. இக்கல்லூரியின் சி.எஸ்.ஐ (Computer Society of India) மகளிர் பிரிவு. மேலும் கணிப்பொறித் துறையின் சார்பில் பல்வேறு பயிலரங்கங்களும், கருத்தரங்கங்களும் ஏற்பாடு செய்யப்படுவதையும் வழக்கமாகவே கொண்டுள்ளது இக்கல்லூரி.

இதில் மாநில அளவில்

IV-ம் பக்கம் பார்க்க

# THE HINDU 8/8/98

# 3 software packages for handicapped released

By Our Staff Reporter

TIRUCHI, Aug. 7.

Three separate software packages for the mentally retarded, hearing impaired and orthopaedically handicapped children developed by the students of the Shrimathi Indira Gandhi College in association with the Holy Cross Service Society were released here today.

Explaining the salient features of the software packages at a function organised at the college, Dr. K. Meena, principal of the college, observed that there was tremendous potential for using the latest technological tools for helping the physically handicapped children as the country had a very high number of disabled persons.

Dr. Meena said the three packages included a language assessment tool for mentally retarded children, a language performance test and a complete case tool package for the orthopaedically handicapped children.

The package for the mentally retarded and hearing impaired children would help them recognise and identify various objects and improve their grasping power through the visual media.

The visual aids were found to be effective in improving the communication skills of the mentally retarded children to a great extent.

The package would also help analyse their performance.

The software for the hearing impaired has been developed to help children below the age of 3 years improve their speech and comprehension skills.

Dr. S. Prabhakaran, secretary, Holy Cross Service Society, stressed the need for making the latest technology available for the physically and mentally retarded children though such ventures may not be commercially viable.

Stating that there were many popular misconceptions about disabled persons in the society, he said many of them could function as normal human beings with proper training and treatment.

Earlier, Mr. Ramasubbu, past president, Rotary Club of Cauvery, released the software packages.

Mr. Valliappan, president, Rotary Club of Cauvery, installed new office-bearers of Rotaract Club of the College.

DINAMALAR 9/8/98

# SHRIMATI INDIRA GANDHI COLLEGE

(Nationally Accredited at "A" Grade (3rd Cycle) by NAAC)

Chatram Bus Stand, Tiruchirappalli – 620002.

திருச்சியில் நடந்த ரோட்ராக்ட் விழாவில் தகவல்

# ஊனமுற்ற குழந்தைகள் கல்விக்காக புதிய 'சாப்ட்வேர் சிஸ்டம்' அறிமுகம்

திருச்சி, ஆக.9—

ஊனமுற்ற குழந்தைகளின் கல்விக்காக புதிய சாப்ட்வேர் சிஸ்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதாக திருச்சியில் நடந்த விழா ஒன்றில் தகவல் தெரிவிக்கப்பட்டது.

திருச்சி இந்திரா காந்தி கல்லூரியில் ரோட்ராக்ட் நிர்வாகிகள் பதவி ஏற்பு விழா நடந்தது.

மதுபாலாவின் இறைவணக்கத்துடன் விழா துவங்கியது. ஆர்.பரிமளா வரவேற்று பேசினார். ரோட்ராக்ட் தலைவர் எஸ்.கீர்த்தனா ஆண்டு அறிக்கை வாசித்தார். எஸ்.பி., கல்யாண் புதிய தலைவி பற்றி அறிமுக உரையாற்றினார். பின்னர் காவேரி ரோட்டரி கிளப் தலைவர் வள்ளியப்பன் புதிய தலைவிக்கு பதவிப் பிரமாணம் செய்துவைத்து பேசினார்.

ரோட்ராக்ட் புதிய தலைவி சுபிதாரங்கம் மற்ற உறுப்பினர்களை அறிமுகம் செய்து வைத்தார்.

பின்னர் உதவித் தலைவராக பி.பார்கவி, செயலாளராக ஆர்.சுப்ரியா, இணைச் செயலாளராக எஸ்.ஹேமலதா, பொருளாளராக எஸ்.அனிதா, எடிட்டராக கே.எஸ்.பொற்கொடி மற்றும் டைரக்டர்களாக சி.மதுபாலா (கிளப் சர்வீஸ்), ஆர்.பரிமளா (கம்யூனிட்டி சர்விஸ்) சந்திரா (புரொபஷனல் டெவலப்மென்ட்) எஸ்.மலர்விழி (இன்டர் நேஷனல் அன்டர்ஸ்டேன்டிங்) எஸ்.சசிகலா ஆகியோர் பதவி ஏற்றுக் கொண்டனர்.

ஹோலிகிராஸ் சர்வீஸ் சொசைட்டி நிர்வாக இயக்குனர் மற்றும் செயலாளர் டாக்டர் எஸ்.பிரபாகரன் வாழ்த்திப் பேசினார்.



திருச்சி இந்திராகாந்தி கல்லூரியில் நடந்த விழாவில் ரோட்ராக்ட் புதிய தலைவி சுபிதாரங்கத்துக்கு காவேரி ரோட்டரி சங்கத் தலைவர் வள்ளியப்பன் பதவி பிரமாணம் செய்து வைக்கிறார். அருகில் கல்லூரி முதல்வர் டாக்டர் மீனா, வக்கீல் ரகுநாத், கல்யாண் உட்பட பலர் உள்ளனர்.

## புதிய சாப்ட்வேர் சிஸ்டம் அறிமுகம்

விழாவில் இந்திரா காந்தி கல்லூரி முதல்வர் மீனா புதிதாக அறிமுகப்படுத்தப்படும் சாப்ட்வேர் சர்வீஸ் சிஸ்டம் பற்றி பேசியதாவது:

திருச்சி ஹோலிகிராஸ் சேவை கழகத்துடன் இணைந்து இந்திரா காந்தி கல்லூரி மாணவிகள் மென்பொருள் (சாப்ட்வேர்) ஒன்றை தயாரித்துள்ளனர். பல்வேறு பள்ளிகளில் உள்ள ஊனமுற்றவர்களுக்கு தரமான கல்வியை அளிப்பதில் இந்த சாப்ட்வேர் உதவும். அத்துடன் பல்வேறு பிரிவுகளில் உள்ள ஊனமுற்றவர்களின் திறனையும், புரிந்து கொள்ளும் சக்தியையும் எளிதாக்குவதிலும் இது உதவும்.

மனநலம் குன்றிய குழந்தைகள் மொழி பற்றி தெரிந்து கொள்ளும் வகையில் ஒரு கருவியும், காதுகேளாத குழந்தைகள் மொழித்திறன் [illegible]

தங்களின் எண்ணங்களை மற்றவர்களுக்கு புரியவைப்பது என்பது காது கேளாத குழந்தைகளுக்கு எளிதான காரியம் அல்ல. அவர்களுக்கு சில சிறப்பு பயிற்சிகள் தேவை. காது கேளாத குழந்தைகள் கம்ப்யூட்டர் மூலம் கற்றுக்கொள்ள முடியும். மற்றவர்கள் சொல்வதை புரிந்து கொள்ளவும், நன்றாக பேசவும், 3 வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கு இது உதவும்.

இவ்வாறு மீனா பேசினார்.

பின்னர் சாப்ட்வேர் சிஸ்டத்தை தினமலர் இணை ஆசிரியரும், திருச்சி காவேரி ரோட்டரி சங்க முன்னாள் தலைவருமான ஆர்.ராமசுப்பு துவக்கி வைத்து பேசுகையில், "இது போன்ற ஊனமுற்ற குழந்தைகளுக்காக எளிய முறையில் இது போன்று சிஸ்டத்தை யாரும் அறிமுகப்படுத்தி இருக்க மாட்டார்கள் என்று நினைக்கிறேன்" என்று பாராட்டினார்.

அசோக் வாழ்த்திப் பேசினார். சிறப்பு விருந்தினர்களுக்கு எஸ்.கீர்த்தனா ரோட்ராக்ட் சார்பில் நினைவுப் பரிசுகளை வழங்கினார். மேலும் கம்ப்யூட்டர் பிரிவில் சாதனைபடைத்த கே.கலா, ஆர்.சாரதா ஆகியோருக்கு பரிசு வழங்கப்பட்டது.

ரோட்ராக்ட் செயலாளர் ஆர்.சுப்ரியா நன்றி கூறினார்.

விழாவில் வக்கீல் ரகுநாத் மற்றும் பெற்றோர்கள், மாணவ, மாணவிகள் கலந்து கொண்டனர்.

# புத்தக நிறுவனங்களுக்கு ஜனாதிபதி யோசனை

கொச்சி, ஆக. 9—

மனிதவள மேம்பாட்டுக்கு அறிவினை பரப்புவதில் புத்தக வெளியீட்டு நிறுவனங்கள் முக்கிய பங்காற்றி வருகின்றன. பாட புத்தகங்களை தவிர இலக்கியம், மற்ற துறை சார்ந்த புத்தகங்களை அதிகமாக வெளியிட்ட புத்தக நிறுவனங்களுக்கு ஜனாதிபதி கே.ஆர்.நாராயணன் வேண்டுகோள் விடுத்தார்.

கேரளாவில் பயணம் மேற்கொண்டுள்ள ஜனாதிபதி [illegible]

கங்கள் அல்லாத பிற புத்தகங்களை வெளியிட்டு நிறுவனங்கள் வெளியிட முன் வர வேண்டும்.

கேரளாவில் எழுதப்படிக்கத் தெரிந்தவர்கள் அதிகம் இருப்பதால், பல 'டிவி' சேனல்கள் வந்த போதும் புத்தகங்கள் மற்றும் நாளிதழ்கள் பிரபலம் பெற்று உள்ளன. புத்தக வெளியீடு ஒரு தொழிலாக இருந்தாலும் ஆசிரியர்கள், வெளியீட்டாளர்கள், விற்பனையாளர் [illegible] என நான்கு முக் [illegible]

# SHRIMATI INDIRA GANDHI COLLEGE

(Nationally Accredited at "A" Grade (3rd Cycle) by NAAC)

Chatram Bus Stand, Tiruchirappalli – 620002.


## DINATHANTHI 25/11/98



கம்ப்யூட்டர் பயிற்சி வகுப்பை கலெக்டர் மூர்த்தி குத்துவிளக்கு ஏற்றி தொடங்கி வைத்தார். அருகே மாவட்ட போலீஸ் அதிகாரி ரத்தினசபாபதி, இந்திராகாந்தி கல்லூரி முதல்வர் மீனா.

திருச்சி மாவட்ட போலீஸ் அதிகாரி

# அலுவலக பணியாளருக்கு கம்ப்யூட்டர் பயிற்சி

## இந்திராகாந்தி கல்லூரியில் தொடங்கியது

திருச்சி, நவ. 28–

திருச்சி போலீஸ் சூப்பிரண்டு அலுவலக பணியாளர்களுக்கு தகவல்களை வேகமாக பெற கம்ப்யூட்டர் பயிற்சி வகுப்பு இந்திரா காந்தி கல்லூரியில் நடக்கிறது.

இதன் தொடக்க விழா நேற்று நடந்தது. மாவட்ட கலெக்டர் மூர்த்தி தொடங்கி வைத்தார்.

### கம்ப்யூட்டர் பயிற்சி

திருச்சி இந்திரா காந்தி கல்லூரியில் பல்வேறு துறையினருக்கு கம்ப்யூட்டர் பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டு வருகிறது.

திருச்சி தகவல் தொழில் நுட்ப முனைப்புக் குழு மற்றும் திருச்சி மாவட்ட தொழில் மையம் இணைந்து திருச்சி மாவட்ட போலீஸ் சூப்பிரண்டு அலுவலகத்தில் உள்ள பணியாளர்களுக்கு கம்ப்யூட்டர் பயிற்சி அளிக்கப்படுகிறது.

### தொடக்க விழா

கம்ப்யூட்டர் பயிற்சி தொடக்க விழா நேற்று காலை திருச்சி இந்திரா காந்தி கல்லூரியில் தொடங்கியது. மாவட்ட கலெக்டர் வை.மூர்த்தி குத்து விளக்கு ஏற்றி தொடங்கி வைத்தார்.

இதில் மாவட்ட போலீஸ் சூப்பிரண்டு ரத்தினசபாபதி இந்திராகாந்தி கல்லூரி முதல்வர் மீனா, அவரது கணவர் வழக்கறிஞர் குஞ்சிதபாதம், தேசிய கல்லூரி நிர்வாகி, ஆடிட்டர் சந்தானம் மற்றும் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

### பயிற்சி

தகவல் தொழில் நுட்ப செய்திகளை வேகமாக பெறுவதற்கும் அனுப்புவதற்கும் இந்த பயிற்சி மிகவும் உதவியாக இருக்கும். இந்த பயிற்சியில் 27 பேர் கலந்து கொண்டு உள்ளனர். வருகிற 5–ந் தேதி வரை பயிற்சி நடக்கிறது.

### மீனா

இதற்கான ஏற்பாடுகளை கம்ப்யூட்டர் பயிற்சி வகுப்புகளின் ஒருங்கிணைப்பாளரும், கம்ப்யூட்டர் துறை தலைவருமான கல்லூரி முதல்வருமான கே.மீனா செய்து உள்ளார்.

# SHRIMATI INDIRA GANDHI COLLEGE

(Nationally Accredited at "A" Grade (3rd Cycle) by NAAC)

Chatram Bus Stand, Tiruchirappalli – 620002.

## DINABOOMI 28/11/98

காவல்துறை பணியாளர்களுக்கு

# கம்ப்யூட்டர் பயிற்சி வகுப்பு

திருச்சி, நவ.28.

திருச்சி இந்திரா காந்தி கல்லூரி, திருச்சி தகவல் தொழில் நுட்ப முனைப்புக்குழு மற்றும் மாவட்ட தொழில் மையம் ஆகியவை இணைந்து காவல்துறை கண்காணிப்பாளர் அலுவலகப்பணியாளர்களுக்கு கம்ப்யூட்டர் பயிற்சி வகுப்புகள் நடத்துகின்றன. இப்பயிற்சி வகுப்பின் துவக்க விழா நேற்று இந்திரா காந்தி கல்லூரியில் நடைபெற்றது.

இதனை திருச்சி மாவட்ட கலெக்டர் வைரமூர்த்தி துவக்கி வைத்தார். கம்ப்யூட்டரின் பயன்பாடு சமீப காலங்களில் பல்வேறு துறைகளிலும் அதிகரித்து வருவதைச் சுட்டிகாட்டி பேசிய கலெக்டர் மூர்த்தி ஒவ்வொரு வீட்டிலும் கம்ப்யூட்டர் வைத்துக்கொள்ளவதற்கான அவசியம் ஏற்பட்டு விட்டதையும் சுட்டிக்காட்டினார்.

நிகழ்ச்சியில் பங்கேற்று பேசிய மாவட்ட காவல்துறைக் கண்காணிப்பாளர் ரத்தினசபாபதி காவல்துறையில் கம்ப்யூட்டரின் பயன்பாடு குறித்து விளக்கினார்.

விழாவில் பங்கேற்றுப் பேசிய கல்லூரி முதல்வர் டாக்டர் மீனா, அரசு ஊழியர்கள் ஆதிதிராவிடப்பள்ளி ஆசிரியர்கள் மற்றும் குடும்ப பெண்களுக்கு இந்திராகாந்தி கல்லூரியின் சார்பாக பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டதை நினைவு கூர்ந்தார்.

வரும் 5-ம் தேதி வரை நடைபெறும் இப்பயிற்சி வகுப்பில் திருச்சி மாவட்ட கண்காணிப்பாளர் அலுவலகத்தில் பணியாற்றும் 27 அலுவலர்கள் பல்வேறு பயிற்சி பெறுகிறார்கள்.

## DINAMALAR 12/1/99



திருச்சி இந்திராகாந்தி கல்லூரியில் நடந்த மகளிர் தொழில் முனைவோர் திட்ட பயிற்சி சான்றிதழ் வழங்கும் விழாவில் திருச்சி மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கித் தலைவர் அன்பில் பொய்யாமொழி எம்.எல்.ஏ., பேசுகிறார். அருகில் மாவட்ட தொழில் மைய பொது மேலாளர் ராசப்பன், இந்திராகாந்தி கல்லூரி முதல்வர் மீனா, திருச்சி மாவட்ட குறு மற்றும் சிறுதொழில் சங்க தலைவர் ஸ்ரீதரன் ஆகியோர் உள்ளனர்.

இந்திராகாந்தி கல்லூரியில்

# கிராமப்புற பெண்களுக்காக 50 கம்ப்யூட்டருடன் பயிற்சி வகுப்பு

திருச்சி, ஜன.12—

"கிராமப்புற பெண்கள் மேம்பாட்டிற்காக 50 கம்ப்யூட்டர்களைக் கொண்ட பயிற்சி வகுப்பு இந்திரா காந்தி கல்லூரியில் விரைவில் துவக்கப்படும்" என்று கல்லூரி முதல்வர் மீனா தெரிவித்தார்.

திருச்சி இந்திராகாந்தி கல்லூரியில் மகளிர் தொழில் முனைவோர் மேம்பாட்டுத் திட்ட பயிற்சி நிறைவு விழா மற்றும் சுயவேலை வாய்ப்புத் திட்ட விழிப்புணர்வு முகாம் நடைபெற்றது.

திருச்சி மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கித் தலைவர் அன்பில் பொய்யாமொழி தலைமை தாங்கினார். அவர் பேசியதாவது:

சொத்தில் சமபங்கு பெண்களுக்கு வழங்கப்பட வேண்டும் என்ற நிலை வந்தது போல் சுயவேலை வாய்ப்பிலும் பெண்க[illegible] வழிவகுக்கும்.

தமிழ்நாட்டில் மட்டுமல்ல இந்தியாவிலேயே பெண்கள் என்றாலே அடுப்பூதுவதற்கு மட்டுமே என்ற நிலை எவ்வளவோ மாறியுள்ளது. அது இன்னும் உயர்வடைய வேண்டும் என்றார்.

பின்னர், பயிற்சியில் பங்கு பெற்றவர்களுக்கு சான்றிதழ்களையும் சுயவேலைவாய்ப்புத் திட்டத்தின் மூலம் மூன்று நபர்களுக்கு உதவித் தொகை யையும் அவர் வழங்கினார்.

பயிற்சி வகுப்பு: கல்லூரி முதல்வர் டாக்டர் மீனா பேசியதாவது:

உலகம் தகவல் தொடர்பு உலகமாக மாறி வருகிற இந்த நாளில் நகர பெண்களை விட கிராமப்புற பெண்கள் அதிகளவில் இது [illegible]

[illegible]யில் துவக்க உள்ளோம் என்றார்.

திருச்சி மாவட்ட குறு மற்றும் சிறு தொழில் சங்கத் தலைவர் ஸ்ரீதரன் பேசுகையில், "50 ஆண்டுகளுக்கு பிறகு நம் மக்கள் எதனையும் தெளிவாக புரிந்துக் கொள்ள வேண்டுமானால் அது தாய்மொழி மூலமாக தான் என்பதை புரிந்து கொண்டுள்ளனர். இதுவே அவர்களின் முன்னேற்றத்திற்கான ஒரு சிறந்த எடுத்துக்காட்டு" என்றும் கூறினார்.

விழாவில் இந்தியன் ஓவர்சீஸ் வங்கி மேலாளர் சுப்பிரமணியன், தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழக கிளை மேலாளர் ஸ்ரீனிவாசன், செராமிக் வித்யாபீடின் திட்ட அதிகாரி பி.வி.வெங்கட்ராமன், சித்ரா சிவக்குமார், விஜில் என்வேர் கணேசன் உட்பட பலரும் [illegible]

# SHRIMATI INDIRA GANDHI COLLEGE

(Nationally Accredited at "A" Grade (3rd Cycle) by NAAC)

Chatram Bus Stand, Tiruchirappalli – 620002.

## DINABOOMI 12/1/99



திருச்சி இந்திரா காந்தி கல்லூரி வளாகத்தில் நடைபெற்ற மகளிர் தொழில் முனைவோர் மேம்பாட்டு திட்ட பயிற்சி நிறைவுவிழாவில் கல்லூரி முதல்வர் மீனா குத்து விளக் கேற்றி வைக்கிறார். அருகில் எம்.எல்.ஏ. அன்பில் பொய்யாமொழி, சிறுதொழில் சங்க தலைவர் ஸ்ரீதரன் மற்றும் பலர் உள்ளனர்.

# பெண்களுக்கு கம்ப்யூட்டர் பயிற்சி

சென்னை, ஜன.12-

பெண் தொழில் முனைவோர்களுக்காக சிறு தொழில் சேவை நிலையம் கம்ப்யூட்டர் சிறப்பு பயிற்சிகளை ஆரம்பித்துள்ளது என்று சிறு தொழில் சேவை நிலையத்தின் இயக்குனர் கருணாகரன் தெரிவித்தார்.

இதுபற்றி அவர் நிருபர்களுக்கு பேட்டியளித்தபோது கூறியதாவது:-

சிறுதொழில் மேம்பாட்டுக்காகவும் பெரிய தொழில் நிறுவனங்களின் தொழில் உற்பத்திக்காகவும் புதிய தொழில் முனைவோருக்காகவும் குறிப்பாக மகளிர் தொழில் முனைவோருக்காகவும் கம்ப்யூட்டர் சிறப்பு நிகழ்ச்சிகளை சிறுதொழில் சேவை நிலையம் ஏற்பாடு செய்துள்ளது.

சிறுதொழில் சேவை நிலையம் ஜனவரி 29, 30 தேதிகளில் வாங்குவோர், விற்போர் சந்தை கண்காட்சி கருத்தரங்கை நடத்துகிறது.

இந்த கருத்தரங்கம் சிறிய மற்றும் பெரிய தொழில் நிறுவனங்களுக்கு இடையே வர்த்தக பரிமாற்றங்களை ஏற்படுத்த உதவும். சிறுதொழில்சேவை நிலையம் சர்வதேச தரமான ஐஎஸ்ஓ.9000 சான்றிதழ் பெற்றிருப்பது குறிப்பிடத்தக்கது.

### கம்ப்யூட்டர் சென்டர்

தற்போது சிறுதொழில் சேவை மையம் கம்ப்யூட்டர் பயிற்சிகளை புதிய தொழில் முனைவோருக்காகவும், பெண்களுக்காகவும் கற்றுத்தர திட்டமிட்டுள்ளது. இங்கு சுமார் 3 ஆயிரம் "கம்ப்யூட்டர் அப்ளிகேஷன்களை" சொல்லித்தரக்கூடிய ஐ.பி.எம். ஏ.எஸ்400 கம்ப்யூட்டர் பயிற்சி தரப்பட உள்ளது.

சென்னை ராயபுரத்தில் வருகிற 17-ம் தேதி கம்ப்யூட்டர் மையம் திறக்கப்பட உள்ளது. மத்திய அமைச்சர் கடம்பூர் ஜனார்த்தனன் மையத்தை திறந்து வைக்கிறார்.

இவ்வாறு அவர் கூறினார்.

DINAMALAR 24/4/99

# SHRIMATI INDIRA GANDHI COLLEGE

(Nationally Accredited at "A" Grade (3rd Cycle) by NAAC)

Chatram Bus Stand, Tiruchirappalli – 620002.

## இல்லத்து அரசிகளுக்கு "தினமலர்" வழங்கும்

## மகிழ்ச்சிகரமான செய்தி

# தினமலர்

மற்றும்

## ஸ்ரீமதி இந்திராகாந்தி மகளிர் கல்லூரி

இணைந்து வழங்கும்

## "இலவச கணிப்பொறி பயிற்சி வகுப்புகள்"

இல்லத்து அரசிகளே, கோடை விடுமுறையை பயனுள்ளதாக பயன்படுத்திக்கொள்ள தினமலர் மற்றும் இந்திராகாந்தி மகளிர் கல்லூரி இணைந்து வழங்கும் குறுகிய கால கணிப்பொறி வகுப்புகள் சிறப்பான முறையில் நடைபெறவுள்ளது.

இத்துடன் உள்ள பாரத்தை பூர்த்தி செய்து கீழ்கண்ட முகவரிக்கு 29.4.99 தேதிக்குள் கிடைக்கும்படி அனுப்பி வைக்கவேண்டும். நடுவர்களின் தேர்வுப்படி தேர்ச்சி பெற்ற 100 நபர்களுக்கும் தபால் மூலம் தகவல் தெரிவிக்கப்படும்.

பயிற்சி வகுப்புகள் நடைபெறும் தேதி: 5.5.99 முதல் 12.5.99 வரை. நேரம் மற்றும் இடம் பின்னர் தபால் மூலம் தெரிவிக்கப்படும்.

### *Courses Offered*

1. Introduction to Windows/ MS Office - MS Word, MS Excel
2. Computer Graphics/ Instant Artist/ Home Design
3. Special Software / Educational Institution Information System Cookery Software
4. Multimedia concept/ Power Point - Slide creation Morphing - Image Editing Audio Editing
5. Tamil Software / அ, ஆ, க, ங, ண, ஹ, ல
6. A Tour on Internet

SHORT TERM FREE COURSE ON COMPUTER APPLICATION FOR HOUSEWIVES (FROM MAY 5th TO 12th)

### ENTRY FORM

1. Name (in capitals) :
2. Age and Date of Birth :
3. Name of Father/ Husband Occupation and Complete address :
4. Educational Qualification :
5. Details of Training in or Exposure to Computers already had, if any. :
6. Hobbies and Subjects of Special Interest :

SIGNATURE

Station :

Date :

* NOTE : 1. Minimum qualification - Pass in S.S.L.C./ +2 or its equivalent
2. Age - Above 20 years

குறிப்பு : மேலே குறிப்பிட்ட பாரம் போன்று கையால் எழுதியோ (அல்லது) டைப் செய்தோ கீழ்கண்ட முகவரிக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

தபால் அனுப்ப வேண்டிய முகவரி :

"இலவச கணிப்பொறி பயிற்சி"

தினமலர்,

பேர்ட்ஸ் ரோடு, கன்டோன்மென்ட், திருச்சி-620 001.

# SHRIMATI INDIRA GANDHI COLLEGE

(Nationally Accredited at "A" Grade (3rd Cycle) by NAAC)

Chatram Bus Stand, Tiruchirappalli – 620002.

## THE HINDU 12/5/99

Advertiser's Feature

# INFORMATION TECH

## Taking information to the doorstep

By Our Special Correspondent

TIRUCHI: In the modern world, information is power, knowledge is power. And the revolution in the field of information technology ushered in by the spectacular and harmonious blending of the latest in the field of telecommunications and computers, has made it possible for anyone to gain access to the information stored in the vast treasure house of knowledge in any part of the world, thanks to the Internet facility. The Internet is a network of networks, spread all over the world, and it is estimated that by the year 2000, the number of Internet users will cross the 200 million mark.

If the industrial revolution meant production and supply on a mass scale, the information revolution means bits and bytes and giving the customers, what they need, when they needed, and in the exact quantity be at their workspot or home.

Tiruchi, of course, had a headstart in the field of computer science, when over a decade ago, the Bharathidasan University introduced computer study in the degree courses in the arts and science colleges. Today almost all the private arts and science colleges, besides engineering colleges, are offering the students computer science. On an average, about 5,000 students are emerging from the educational institutions in the

numbers in Karur, Perambalur, Musiri, Manapparai, Lalgudi and Ariyalur, have helped in sustaining the computer awareness programme in smaller towns too. The private Internet booths are also a boon to the people.

The Regional Engineering College, Tiruchi with the reputation of being one of the best computer training centres in the country, and seven other colleges have taken a line facility to enable all students to get an exposure to computers and Internet. Quite a few schools and colleges are organising special summer coaching classes for the youngsters. The response to the training programme for housewives which concluded on Tuesday at the Smt. Indira Gandhi College was tremendous. As many as 700 women, with Plus Two or SSLC qualifications had applied of which 100 were selected to join the one course-week, said Dr. K. Meena, Principal, Smt. Indira Gandhi College, and president of the Internet Users' Club of Tiruchi.

The college had also organised a special awareness programme for teachers in Adi-Dravidar schools, police personnel and bank officials, Dr. V. Gopalakrishnan, patron of the IUCT, and General Manager, BHEL, said the response to the special Internet and computer awareness programmes organised by the IUCT for doctors and lawyers had evoked a good response.



Housewives attending a computer training programme.

company with more than 2,000 subscribers. The recent decision of BPL to make all incoming calls free has resulted in a surge in demand for cellular phones. To provide better service, independent of the telecommunication department network, the BPL is now putting up its own backbone and network. The AIRCEL company also will be launching its cellular phone service in Tiruchi soon. The cellular telephone system provides for communication between two users anywhere in the world. AIRCEL's cellular network has been designed and installed by Ericsson, with its new generation technology

should instal a server in Tiruchi, which alone will help easy uploading and downloading of information through Internet, says Dr. K. Meena, president, Internet Users Club of Tiruchi.

Industrialists of Tiruchi should also be prepared to venture into the new field of software development boldly, and involve students in the work, it is felt. Though the Government had announced its intention to establish a software development park in Tiruchi, and a 50-acre plot has been allotted by the REC, for it little progress has been made in this direction so far.

In the meantime, there is

Thousands of computer students who had left Tiruchi in the past three decades to many parts of the world have started using the facility.

The need of the hour is to take the message to other sections of society, and also industrialists and businessmen.

In recent months the Centre and the State Governments have announced their intention to take the benefits of information technology to the rural areas. Teaching institutions, computer enthusiasts, industrialists and government officials should go all out to make full use of the infrastructure available in Tiruchi to meet the challenges

## DINAMALAR 6/5/99

### திருச்சி சிட்டி நியூஸ்

இல்லத்தரசிகளுக்கான

# கம்ப்யூட்டர் பயிற்சி வகுப்பு துவக்கம்

திருச்சி, மே 6—

திருச்சியில் தினமலர் மற்றும் இந்திராகாந்தி கல்லூரி இணைந்து நடத்தும் இல்லத்தரசிகளுக்கான கம்ப்யூட்டர் பயிற்சி வகுப்பு நேற்று துவங்கியது.

திருச்சியில் தினமலர் மற்றும் இந்திராகாந்தி கல்லூரி சார்பில் இல்லத்தரசிகளுக்கான குறுகிய கால கம்ப்யூட்டர் பயிற்சி முகாம் கல்லூரி வளாகத்தில் நேற்று துவங்கியது. இந்த வகுப்பு வரும் 12ம் தேதி வரை நடைபெறுகிறது.

தினமலர் பங்குதாரரும், அசோசியேட் எடிட்டருமான ஆர்.ராகவன் குத்துவிளக்கு ஏற்றி பயிற்சி வகுப்பை துவக்கி வைத்து பேசியதாவது:

தொழிற்புரட்சி ஏற்பட்டுள்ள இந்த காலத்தில் கம்ப்யூட்டர் பயிற்சி பெறுவது மிகவும் அவசியமான ஒன்றாகும். எனவே இந்த பயிற்சி முகாம் துவங்கப்பட்டுள்ளது.

மாணவ, மாணவிகளின் நலன் கருதி அவர்களுக்கு ஆண்டுதோறும் "ஜெயித்துக்காட்டுவோம்" மற்றும் "தினமலர் வழிகாட்டி" போன்ற நிகழ்ச்சிகளை தினமலர் வெற்றிகரமாக நடத்தி வருகிறது. அந்த வகையில் மாணவர்களுக்கு மட்டுமின்றி இல்லத்தரசிகளும் பயன்பெறும் வகையில் கம்ப்யூட்டர் பயிற்சி வகுப்பு துவங்கப்பட்டுள்ளது. இந்த பயிற்சியுடன் நின்றுவிடாமல் தொடர்ந்து அதை பயின்று வரவேண்டும்.

இந்த பயிற்சி வகுப்பில் சேருவதற்காக 800க்கும் மேற்பட்டவர்கள் ஆர்வத்துடன் விண்ணப்பித்திருந்தனர். அவர்களில் 100 பேர் மட்டும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். இல்லத்தரசிகள் அதிக அளவு ஆர்வம் காட்டியதையடுத்து அடுத்த கட்டமாக மேலும் 100 பேருக்கு கம்ப்யூட்டர் பயிற்சி அளிக்கப்படும்.

இவ்வாறு தினமலர் பங்குதாரர் ஆர்.ராகவன் பேசினார்.

கம்ப்யூட்டர் வகுப்பு பற்றி இந்திராகாந்தி கல்லூரி முதல்வர் மீனா பேசியதாவது:

இல்லத்தரசிகளுக்கு கம்ப்யூட்டரின் அடிப்படை விஷயங்கள் இங்கு கற்றுத்தரப்படவுள்ளது. குறிப்பாக இல்லத்தரசிகள் பயன்பெறும் அளவில் வீட்டின் அமைப்பு, எந்தவிதமாக நிறங்களை தேர்ந்தெடுத்து வீட்டிற்கு வர்ணம் தீட்டலாம், வாழ்த்து அட்டைகள் தயாரித்தல், குழந்தைகளுக்கான கேம்ஸ், கார்ட்டூன்கள் பற்றி பயிற்சி அளிக்கப்படும். இந்த 8 நாள் பயிற்சியில் அடிப்படை விஷயங்கள் மட்டுமே கற்றுத்தரப்படும். வீட்டில் கம்ப்யூட்டர் இருந்தால் இங்கு பயின்றதை தொடர்ந்து பயிற்சி எடுத்துக் கொள்ளலாம். தொடர்ந்து பயிற்சி எடுத்துக் கொள்ளாவிட்டால் மறந்துவிடும்.

இவ்வாறு மீனா பேசினார்.

கல்லூரி செயலாளர் சந்தானம் வரவேற்றார். விரிவுரையாளர் மணிமேகலை நன்றி கூறினார்.



தினமலர் மற்றும் இந்திராகாந்தி கல்லூரி சார்பில் திருச்சியில் நடக்கும் இல்லத்தரசிகளுக்கான குறுகிய கால பயிற்சி வகுப்பை தினமலர் பங்குதாரர் ஆர்.ராகவன் குத்துவிளக்கேற்றி துவக்கி வைக்கிறார். அருகில் கல்லூரி செயலாளர் சந்தானம், கல்லூரி முதல்வர் மீனா ஆகியோர் உள்ளனர்.

# SHRIMATI INDIRA GANDHI COLLEGE

(Nationally Accredited at "A" Grade (3rd Cycle) by NAAC)

Chatram Bus Stand, Tiruchirappalli – 620002.

## DINAMALAR 13/5/99



தினமலர் மற்றும் இந்திராகாந்தி கல்லூரி ஆகியவை இணைந்து திருச்சியில் நடத்திய இல்லத்தரசிகளுக்கான இலவச கம்ப்யூட்டர் பயிற்சி நிறைவு விழாவில் பயிற்சி பெற்ற ஒரு பெண்ணுக்கு மேயர் புனிதவல்லி சான்றிதழ் மற்றும் பரிசு வழங்குகிறார். அருகில் கல்லூரி முதல்வர் மீனா, கணிப்பொறித்துறை பேராசிரியர் மணிமேகலை ஆகியோர் உள்ளனர்.

### பயிற்சிமுகாமில் வலியுறுத்தல்

# இல்லத்தரசிகளுக்கு இன்டர்நெட் பயன்பாடு அவசியம்

திருச்சி, மே 13—

இல்லத்தரசிகளுக்கு இன்டர்நெட் வசதியின் பயன்பாடு குறித்து இந்திராகாந்தி கல்லூரி முதல்வர் மீனா விளக்கினார்.

தினமலர் மற்றும் இந்திராகாந்தி கல்லூரி சார்பில் இல்லத்தரசிகளுக்கான ஒருவார கம்ப்யூட்டர் பயிற்சி முகாம் நடத்தப்பட்டது. நிறைவு நாளான நேற்று கல்லூரி முதல்வர் மீனா இன்டர்நெட் பற்றி உரையாற்றினார். அவர் பேசியதாவது:

கம்ப்யூட்டர், மோடம் மற்றும் டெலிபோன் ஆகிய மூன்று வசதிகளும் இருந்தால் ஒருவர் இன்டர்நெட் வசதியை பெற முடியும். இத்துடன் பென்டியம் பிரிண்டர் இருப்பது அவசியம். கலர் மானிட்டராக இருந்தால் 'கிராபிக்ஸ்' பார்க்கும் போது நன்றாக இருக்கும். இன்டர்நெட் இணைப்பு கொடுப்பதற்கென சென்னையில் வி.எஸ்.என்.எல். எனும் ஏஜன்சி இயங்கி வருகிறது. இங்கு ஏஜன்சியில் ரூ.500 பதிவு கட்டணம் செலுத்தி இன்டர்நெட் இணைப்பை பெறலாம். இன்டர்நெட்டை பயன்படுத்துவதற்கு ஆண்டுக்கு 100 மணி நேரத்திற்கு ரூ.2400ம், அதை புதுப்பிக்க ரூ. 2400ம் ஆண்டுக்கு 250 மணி நேரத்திற்கு ரூ.5,200ம், 500 மணி நேரத்திற்கு ரூ.8000மும் கட்டணமாக வசூலிக்கப்படுகிறது.

ஒன்றுக்கொன்று தகவல்களை பரிமாறிக் கொள்ளத்தக்க அளவில் கம்ப்யூட்டர்களின் ஒட்டுமொத்த தொகுப்பு இன்டர்நெட் ஆகும். அந்த வகையில் ஒரே ஒரு கம்ப்யூட்டர் இருந்தால் அது சிங்கில் யூசர் என்விரான்மென்ட் என்றும், பல கம்ப்யூட்டர் கொண்டதை மல்டி யூசர்ஸ் என்விரான்மென்ட் எனவும் அழைக்கப்படுகிறது.

தகவல் தொடர்பு நெட்வொர்க்கை எடுத்துக் கொண்டால் லோக்கல் ஏரியா நெட்வொர்க், வைட் ஏரியா நெட்வொர்க் என இரண்டு விதங்கள் உள்ளன. ஒரு குறிப்பிட்ட கட்டிடம் அல்லது அறைக்குள் உள்ளதை லோக்கல் ஏரியா நெட்வொர்க் என்றும், ஒரு நாட்டிற்குள் அல்லது வெளிநாடுகளுக்குள் இருப்பதை வைட்ஏரியா நெட்வொர்க் என்றும் அழைக்கிறோம்.

இங்கு செய்தியை அல்லது தகவலை ஓரிடத்திலிருந்து இன்னொரு இடத்திற்கு அனுப்புவதற்கு புரோட்டக்கால் அவசியமாகிறது.

இன்டர்நெட் இணைப்பு பெறுவதிலும் இரண்டு விதங்கள் உள்ளன. ஒன்று டெடிகேட்டட் லைன். இது தனி இணைப்பு வசதி கொண்டது. சென்னையிலுள்ள வி.எஸ்.என்.எல். ஏஜென்சியிடமிருந்து இதன் மூலம் நேரடியாக தொடர்பு கிடைக்கும். மற்றொன்று டயல் லைன். இதில் பிசியான நேரத்தில் தொடர்பு கிடைப்பதில் தடங்கல் ஏற்படும்.

ஏன் இந்த தடங்கல் என்பதை அறிய வேண்டுமானால் நோடு மற்றும் சர்வர் பற்றி தெரிந்து கொள்ள வேண்டும். திருச்சியில் நோடு வந்து விட்டது. இதன் திறன் குறைவு. எனவே தான் தொடர்பு கிடைப்பதில் அடிக்கடி தடங்கல் ஏற்படும். தடங்கலின்றி தொடர்பு கிடைக்க வேண்டுமானால் சர்வர் வர வேண்டும். இதற்கு திறன் அதிகம். எனவே தடங்கல் ஏற்படாது.

இந்த இன்டர்நெட் வசதியை ஏற்படுத்திக் கொண்டால் வாழ்க்கையின் ஒவ்வொரு அங்கத்திலும் பல பயன்களை நம்மால் பெறமுடியும். தகவல் பரிமாற்றம் செய்து கொள்ள முடியும். குறிப்பிட்ட பல்கலைக்கழகங்கள், கல்லூரிகள் அல்லது தொழிற்துறை பற்றிய விவரங்களை சேகரித்து அறிந்து கொள்ள முடியும். இ.மெயில் அனுப்பவும், வாங்கவும் முடியும். வெளிநாடுகளிலுள்ள உறவினர்களுக்கு முக்கிய விழாக்களின் போது வாழ்த்து அனுப்ப முடியும்.

இது போல பல நன்மைகளை இன்டர்நெட் மூலம் பெற முடியும்.

இவ்வாறு மீனா பேசினார்.


தவிர இன்டர்நெட் முகவரி வெப்பேஜ், டொமைன், வெப்புரவ்சிங் போன்ற இன்டர்நெட் நுட்பங்கள் குறித்தும் மீனா விளக்கினார்.

# DINAKARAN 31/5/99

# SHRIMATI INDIRA GANDHI COLLEGE

(Nationally Accredited at "A" Grade (3rd Cycle) by NAAC)

Chatram Bus Stand, Tiruchirappalli – 620002.



இந்திரா காந்தி பெண்கள் கல்லூரியில் செயல்பட்டு வரும் கம்ப்யூட்டர் மையம்.

## இருபத்தோறாம் நூற்றாண்டில்...

1-ம் பக்க தொடர்ச்சி

சம்பளபட்டியல் தயாரிக்கவும், இருப்புகளின் விபரங்கள் தயாரிக்கவும் கணிப்பொறியைப் பயன்படுத்தலாம். குறிப்பாக, இல்லத்தரசிகள் வரவு செலவுப் பட்டியல் தயாரித்துக் கொள்ளவும், சிறந்த அழகான முறையில் பல வண்ணங்களைக் கொண்ட 'ரங்கோலி' எனப்படும் சிறந்த கோலங்களைக் கற்றுக் கொள்ளவும் கணிப்பொறியானது உதவுகிறது.

இத்தகைய பயன்பாடுகளையெல்லாம் செயல்படுத்த பல்வேறு பயன்பாட்டு மென்பொருள்கள் கணிப்பொறிகளில் பயன்படுத்தப்படுகின்றன. இன்று வணிகத் துறைகளிலும் கூட கணிப்பொறியின் பயன்பாடு மிகச் சிறந்து விளங்குகிறது.

சிறிய நிறுவனங்களில் கூட கணிப்பொறியின் உபயோகம் சமுதாயத்தின் ஒரு ஆரோக்கியமான முன்னேற்றத்தை குறிக்கின்றது. அரசு அலுவலகங்கள், வங்கிகள் போன்றவற்றில் முறையே ஆவணங்கள், வரைவோலைகளில் தகுந்த எண் பிம்பங்களை நிரப்புதல் போன்றவற்றிலும் கணிப்பொறியின் பயன்பாடுகள் முக்கியப் பங்கு வகிக்கிறது. மேலும் பொழுதுப் போக்கான புதிர்களுக்கு விடைகள் கண்டு பிடிக்கவும், 'வரைபடங்கள் வரையவும், நகரும் உருவங்கள் வரைவதற்கும் (ANIMATION) பட்டியல்களின் வெளியீட்டை வரைபடமாக வெளிபடுத்தவும், கணிப்பொறி பயன்படுகின்றது. அதாவது வணிகத் துறையில், புள்ளி விபரங்களை அலசி ஆராயவும், பொறியியல் துறையில் கட்டிடங்களின் வரைபடங்களை துல்லியமாகவும் விரைவாகவும், வரையவும் பயன்படுகின்றது. இவை எல்லாவற்றிற்கும் மேலாக தொழில்நுட்பம் கொண்ட உரைநடை வரைகலை, ஒலி உயிரோட்டம் ஆகிய பன்முகத்தன்மையை வெளிப்படுத்த மல்டி மீடியா என்ற தொழில் நுட்பம் மிகவும் பயன்படுகிறது.

முன்னர் கூறியபடி புதிய கண்டு பிடிப்புகள், தொழில் கொண்டு வரும் இந்த வேளையில் அந்த அரிய மாற்றங்களையும் முன்னேற்றங்களையும் கூட அவ்வப்போது நமது வீட்டிற்கு கொண்டு வருகிறது இன்டர்நெட் எனப்படும் இணை வலை. உலகின் இருவேறு இடங்களில் உள்ள மனிதர்களின் எண்ணங்களை பரிமாறிக் கொள்ள மிகவும் இது உதவியாக உள்ளது.

ஏராளமான செய்திக் குறிப்புகள், தகவல்கள் பல்வேறு துறைகளைச் சார்ந்த கருத்துக் குவியல்கள் ஆகியவை இன்று உலகம் முழுவதும் உள்ள மக்களால் அவரவர் விரும்பும் வகையில் நேரத்தில் கணிப்பொறியை முறையாய் செயல்படுத்தி இன்டர்நெட்டின் மிக முக்கிய அங்கமான வோர்ல்ட்வைட் வெப்'ன் மூலமாகப் பெற்றுக் கொள்ளப் படுகின்றன. கல்வித் துறையில் கல்வி கற்பிப்பது முதல் தேர்வுகளின் முடிவுகள் பெறும் வரை இன்டர் நெட் பயன்படுத்தப் படுகின்றது. கணிதம், ஆங்கிலம், தமிழ் மற்றும் கணிப்பொறித் துறைகள் பற்றி மாணவர்களுக்கு தேவையான கருத்துக்களை இன்டர்நெட்டின் மூலம் பெற்றுக் கொள்ளலாம். தேர்வுகள் முடிந்த பிறகு முடிவுகளைத் தேடி அவர்களை கல்லூரிகளுக்கோ, பள்ளிகளுக்கோ வரச் செய்யாமல் இன்டர்நெட்டின் மூலமாகவே அவர்களுக்குத் தெரியப்படுத்தி விடலாம்.

உலகின் பலவேறு நாடுகளின் அரசியல் செய்திகள், ஸ்டாக் மார்க்கெட் மற்றும் வானிலைப் பற்றிய மாற்றங்களை அவ்வப்போது உடனுக்குடன் தெரிந்து கொள்ளவும் இன்டர்நெட் மிகவும் உதவுகிறது.

'இ-மெயில்' என்பது இப்பொழுது எல்லோராலும் உச்சரிக்கப்படும் தாரக மந்திரமாக விளங்குகிறது. இத்தகைய இ-மெயில் என்பது ஒரு கணிப்பொறியில் இருந்து மற்றொரு கணிப்பொறிக்கு அனுப்பப்படும் மின்னணுத் தகவல் ஆகும். செய்திகளோடு மட்டுமல்லாமல் படங்களையும் அதனுடன் சேர்த்து அனுப்பவும் இ-மெயில் வழி வகுக்கிறது. விருப்பப்பட்ட செய்திகளையும் படங்களையும் வாழ்த்து செய்திகளாக அனுப்ப இ-மெயில் சிறந்த முறையில் உதவுகிறது.

நல்ல செய்திகளும் விஷயங்களும் கிடைக்கும் பொழுது நமது செயல்பாடுகளுக்குகேற்ப அவற்றை பயன்படுத்திக் கொள்வது தான் மனிதகுலத்தை மாற்ற உயிரினங்களிடமிருந்து பிரித்துக் காண்பிக்கும் சிறப்பு அம்சமாகும்.

எனவே இத்தகைய பயன்பாடுகளை மனித குலத்திற்கு அளித்துள்ள விஞ்ஞான வளர்ச்சியையும், அறிவியல் முன்னேற்றத்தையும் தகுந்த விதத்தில் பயன்படுத்தி மனித குலம் மாண்பு பெறுவதற்கு மகத்தான செயல்களை நாம் செய்வோம்.

# DINABOOMI 20/7/99

இந்திராகாந்தி கல்லூரியில்

# அரசு போக்குவரத்துக் கழக அலுவலர்களுக்கு கம்ப்யூட்டர் பயிற்சி

## மேலாண்மை இயக்குனர் தகவல்

திருச்சி, ஜூலை.20.

திருச்சி அரசு போக்குவரத்துக் கழகத்தில் பணிபுரியும் 40 அலுவலர்களுக்கு இந்திராகாந்தி கல்லூரியில் கம்ப்யூட்டர் பயிற்சி அளிக்கப்பட்டு வருவதாக இதன் மேலாண்மை இயக்குனர் கோதண்டபாணி கூறியுள்ளார்.

### மன்ற துவக்கவிழா

திருச்சி இந்திராகாந்தி கல்லூரியில் உள்ள பல்வேறு துறை மன்றங்களின் துவக்கவிழா அக்கல்லூரி வளாகத்தில் நேற்று நடைபெற்றது.

விழாவில் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழக மேலாண்மை இயக்குனர் கோதண்டபாணியும் அவரது துணைவியார் நாயகம் கோதண்டபாணியும் கலந்துகொண்டு கல்லூரி மன்றங்களைக் குத்துவிளக்கேற்றி துவக்கி வைத்தனர்.

விழாவில் கோதண்டபாணி பேசியதாவது:

கல்வி மட்டும் மாணவர்களை நெறிப்படுத்திவிடுகிறது என்பதை ஏற்றுக்கொள்ளமுடியாது. இதனைச் சார்ந்த விளையாட்டு, கலை, இலக்கியம், சமூக சேவை போன்றவையும் மாணவர்களை முழுமையானவர்களாக்க இன்றியமையாததாகும். பள்ளிகளிலும், கல்லூரிகளிலும் மாணவ பெருமக்கள் அன்றாடம் பள்ளிக்கு வந்தால் மட்டுமே முழுமையாகிவிட முடியாது. மேற்சொன்ன துறைகளில் தங்களை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டால் மட்டுமே ஒருவர் கல்வி கற்றதின் முழு பலனைப் பெறமுடியும்.

### திறமைகள்

கல்லூரிகளில் செயல்படும் மாணவர் மன்றங்களால்தான் மாணவர்களிடம் பொதிந்து கிடக்கும் திறமைகளை வெளிக்கொணர முடியும். இவ்வகையில் தொடங்கப்பட்டுள்ள கல்லூரி மன்றங்கள் கல்விக்கு அப்பாற்பட்டும் மாணவர்களை முடுக்கிவிட்டு சகல துறைகளிலும் சிறந்தவர்களாக்க வேண்டும்.

திருச்சியை மையமாகக் கொண்டு செயல்படும் தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகத்தின் அன்றாட நடவடிக்கைகள் அனைத்தும் கம்ப்யூட்டர் மயமாக்கப்பட்டுள்ளன. எனினும், கம்ப்யூட்டர்களை இயக்கும் திறன் அலுவலர்களிடம் குறைவாக உள்ளது. இக்குறையைப் போக்கும் வகையில் 40 அலுவலர்கள் இந்திராகாந்தி கல்லூரியில் குறைந்த கட்டணத்தில் ஒருமாத பயிற்சி பெற்றுவருகிறார்கள்.

இவ்வாறு அவர் பேசினார்.

விழாவில் கல்லூரி முதல்வர் டாக்டர்.மீனா வரவேற்றுப் பேசுகையில் கடந்த ஆண்டில் கல்லூரி மன்றங்களின் மூலம் மேற்கொள்ளப்பட்ட பல்வேறு பணிகளை விளக்கிப்பேசினார்.

விழாவில் கல்லூரி கவுன்சில் உறுப்பினர் வக்கீல் ரமேஷ், துணை முதல்வர் ரமயா, மாலைக்கல்லூரி பொறுப்பாளர் வித்யாலட்சுமி உள்பட பலர் கலந்துகொண்டனர். முடிவில் துணை முதல்வர் ரமா நன்றி கூறினார்.

**SHRIMATI INDIRA GANDHI COLLEGE**

(Nationally Accredited at "A" Grade (3rd Cycle) by NAAC)

Chatram Bus Stand, Tiruchirappalli – 620002.


TAMILMURASU 20/7/99

# இந்திராகாந்தி கல்லூரியில் கம்ப்யூட்டர் பயிற்சி

திருச்சி,ஜூலை.20-

திருச்சி இந்திராகாந்தி கல்லூரியில் குறைந்த செலவில் கம்ப்யூட்டர் பயிற்சி அளிக்கப்படுகிறது என்று கல்லூரி அனைத்து மன்ற தொடக்க விழாவில் திருச்சி போக்குவரத்து கழக அதிகாரி பேசினார்.

## தொடக்க விழா

திருச்சி இந்திராகாந்தி பெண்கள் கல்லூரியில் அனைத்து மன்றங்களின் தொடக்க விழா நேற்று மாலை நடந்தது.

விழாவுக்கு இந்திரா காந்தி கல்லூரி முதல்வர் டாக்டர் கே.மீனா தலைமை தாங்கினார்.

இதில் திருச்சி தமிழ்நாடு போக்குவரத்து கழக நிர்வாக இயக்குனர் கோதண்டபாணி குத்து விளக்கேற்றி மன்றங்களை தொடங்கி வைத்து பேசினார்.

## கல்லூரி ஒழுக்கம்

விழாவில் பேசிய அவர் மாலை நேரத்தில் இங்கே இந்த விழா ஏற்பாடு செய்யப்பட்டு உள்ளது. இங்கே மாணவிகளும், ஆசிரியைகளும் உள்ளனர். நானும் அந்த நிலையில் இருந்து வந்தவன் தான். காலையில் கல்லூரிக்கு வந்த மாணவிகள் வீடு செல்ல வேண்டாமா என்ற எண்ணம் இருக்கும். இந்த நேரத்தில் விழா என்றால் எரிச்சல் வரும்.

ஆனால் இங்கே மாணவிகள் பொறுமையோடு இருக்கிறீர்கள். இந்த கல்லூரியில் இருந்து எனக்கு வந்த அழைப்பிதழே கல்லூரியின் ஒழுக்கத்தை எடுத்து காட்டியது. இங்கு அனைத்து தரப்பினரும் கம்ப்யூட்டர் துறையில் வின்மீனாய் இருக்கும் முதல்வர் கே.மீனா கம்ப்யூட்டர் பயிற்சி அளித்து வருகிறார். நானும் இங்கு மாணவியாக இருந்து கம்ப்யூட்டர் கற்று வருகிறேன். கல்விக்கு ஒழுக்கம் முக்கியம். எனவே ஒழுக்கம் உடைய மாணவிகளாக நீங்கள் விஞ்ஞானிகளாக உருவாக வேண்டும்.

இவ்வாறு அவர் பேசினார்.

## கோதண்டபாணி

சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு கோதண்டபாணி பேசும் போது கிராமங்கள் முன்னேறினால் தான் நாடு முன்னேறும் என்று காந்தி சொன்னார். அந்த வகையில் இந்த கல்லூரி மாணவிகள் நாட்டு நலப் பணி திட்டம் மூலம் கிராம வளர்ச்சிக்கு பாடுபட்டு வருகிறார்கள்.

மேலும் எங்கள் போக்குவரத்து கழகத்தில் கம்ப்யூட்டர் வசதி ஏற்பாடு செய்தபோது சக அதிகாரிகள் கம்ப்யூட்டர் பயிற்சி பெற விரும்பினார்கள். அப்போது பல கம்ப்யூட்டர் சென்டர்களை கேட்டோம். அவர்கள் அதிக தொகை சொன்னார்கள். உடனே நாங்கள் இந்திராகாந்தி கல்லூரியை கேட்டால் என்ன என்று தோன்றியது. நாங்கள் கேட்ட போது முதல்வர் மீனா உடனே சம்மதம் தெரிவித்தார்கள். எங்கள் அலுவலர்கள் 40 பேர் கம்ப்யூட்டர் பயிற்சி எடுத்து வருகிறார்கள். 12 வார பயிற்சி முடிந்து உள்ளது. இன்னும் 6 வாரம் பயிற்சி இருக்கிறது. இந்திராகாந்தி கல்லூரியில் எங்களுக்கு குறைந்த செலவில் கம்ப்யூட்டர் பயிற்சி தந்து வருகிறார்கள். இந்த கல்லூரியை பொறுத்தவரை கல்வி சேவையில் சமூக சேவையும் அடங்கி இருப்பதை நினைத்து பாராட்டுகிறேன்.

இவ்வாறு அவர் பேசினார்.

## பொன்னாடை




திருச்சி இந்திரா காந்தி பெண்கள் கல்லூரியில் அனைத்து மன்ற தொடக்க விழாவில் திருச்சி தமிழ்நாடு போக்குவரத்து கழக அதிகாரி கோதண்டபாணி பேசுவதை படத்தில் காணலாம். அருகில் இந்திரா காந்தி பெண்கள் கல்லூரி முதல்வர் கே.மீனா, நாயக்கம் கோதண்டபாணி ஆகியோர் உள்ளனர்.

# SHRIMATI INDIRA GANDHI COLLEGE

(Nationally Accredited at "A" Grade (3rd Cycle) by NAAC)

Chatram Bus Stand, Tiruchirappalli – 620002.